Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

AXSHAYA CONSTRUCTION JAFFNA
கட்டடங்கள் கட்டுதல்,வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல்,குளியலறை கட்டுதல்
Plumbing, Electrical, Painting
அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புக்கு: 0776679564
(C3690)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை (25.05.2014) பக்கங்கள் 20 ஓசை - 236

## அரியவாய்ப்பை தவறவிட்ட கூட்டமைப்பு மீளவும் வரலாற்றுத் தவறைச் செய்துள்ளது

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



அரிய வாய்ப்புக்களை தமது சுயலாப நோக்கங்களுக்காக வேண்டுமென்றே தவறவிட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டுமொரு அரியவாய்ப்பினை தவறவிட்டு தனது வரலாற்றுத்தவறை மீண்டும் செய்துவிட்டது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் வைபவத்தில் கலந்து கொள்ள வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்திருந்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிராகரித்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் எமது மக்களது விடுதலைப் போராட்டத்தில் நாம் பாரிய தியாகங்களைச் செய்திருந்த நிலையில் இந்திய அரசு முன்வந்து இலங்கை அரசுடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தின் ஊடாக

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி வருகைக்கு எதிர்ப்பு; தமிழக கட்சிகள் மீது மோடி அதிருப்தி



(புதுடில்லி)

தனது பதவியேற்பு நிகழ்வில் இலங்கை ஜனாதிபதியை அழைத்தமை குறித்து தமிழகக் கட்சிகள் காட்டிவரும் எதிர்ப்புத் தொடர்பாக அந்தக்கட்சிகள் மீது தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார். நரேந்திரமோடி. நாடாளுமன்றத் தேர்தலில் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ள பா.ஜனதா மத்தியில் ஆட்சியை அமைக்க உள்ளதுடன் நரேந்திரமோடி பிரதமராக நாளையதினம் பதவியேற்கவுள்ளார்.

இந்த விழாவில் பங்கேற்சார்க் அமைப்பில் இடம் பெற்றுள்ள 7 நாடுகளின் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதி ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொண்ட அவர் மோடி பிரதமராக பங்கேற்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக இன்றையதினம் புதுடில்லி செல்லவுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்தவின் வருகைக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. தமிழக முதல்மைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பா.ம.க. நிறுவனர் ச.ராமதாஸ், சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார், இந்திய கம்யூனிஸ்ட், நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி உள்ளிட்ட அனைதுக் கட்சிகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

19 ஆம் பக்கம் பார்க்க

## 13ஐ அரசு அமுல்படுத்தாவிடின் சமஷ்டிக்கு செல்வார் மோடி

### எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக

13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல் படுத்தாது போனால், இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி சமஷ்டித் தீர்வுக்கு கொண்டு செல்லக் கூடும் என முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கிரஸ் அரசாங்கம் இலங்கையில் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் நின்று கொண்டது.

பாரதிய ஜனதா கட்சியையும் அந்த வரையறைக்குள் நிறுத்திக் கொண்டால் அது இலங்கை பெற்ற வெற்றியாகும்.

இலங்கை குறுகிய காலத்திற்குள் 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால், மோடியின் உதவியுடன் ஜெனிவா சவால்களை எதிர்கொண்டு மேற்குலக சவால்களில் இருந்து தப்பிக்கலாம்.

19 ஆம் பக்கம் பார்க்க

## செயலாளர் பதவியிலிருந்து பி.பீ.ஜயசுந்தர நீக்கம்?



நிதியமைச்சு,திறைசேரி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தரவை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவருடைய வெற்றிடத்திற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் நிஹால் ஜயதிலக்க நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சர் பஷில் ராஜபக்ஷ அமைச்சராக இருக்கின்ற பொருளாதார அபிவிருத்தி

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைத்தமிழ் மக்களை காட்டிக்கொடுக்கார் மோடி

### பொன்.இராதாகிருஷ்ணன் உறுதிமொழி

இந்தியப் பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடி, இலங்கைத் தமிழர்களை ஒரு போதும் காட்டிக்கொடுக்கமாட்டாரென பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் பொன்.இராதாகிருஷ்ணன். தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தமிழ்நாட்டில் சிலர் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்கின்றனர். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, இலங்கைத் தமிழ் மக்களைக் காட்டிக்கொடுத்தது போன்று பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி துரோகம் இழைக்காது. இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பிலும் தமிழ்நாடு மற்றும் இலங்கை மீனவர் பிரச்சினை குறித்தும் சாதகமான நிலைமைகளைக் கையாளும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பாழடைந்த வீட்டில் விபசாரம் வதிரியில் சிக்கினர் ஐவர்

(கரணவாய்)

வதிரியில் விபசாரத்தில் ஈடுபட்ட ஐவர் நெல்லியடி பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வதிரி சங்கக் கடைக்கு அருகிலுள்ள பாழடைந்த வீட்டினுள் விபசாரத்தில் ஈடுபட்ட 29, 53, 41,39 வயதுடைய நான்கு ஆண்களும் 49 வயதுடைய பூநகறி மரத்தடி கொக்குவிலைச் சேர்ந்த பெண்ணொருவரும், நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்படும் போது ஆடைகள் களைந்த நிலையில் இவர்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் ஐவரும்

19 ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் அமைப்புக்கள் தடை மீள் பரிசீலனை செய்யவேண்டும்

### கோரிக்கை விடுக்கும் கூட்டமைப்பு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தடைசெய்யப்பட்ட முடிவை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு பயங்கரவாதத்துடன் தொடர்புள்ளது எனக் குற்றம் சுமத்தி அரசாங்கம் அவற்றைத் தடை செய்த போதிலும் அதற்கான ஆதாரங்கள் இல்லை என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு வன்முறை ரீதியிலான அச்சுறுத்தலை எதிர்கொள்ள பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கு உரிமை உள்ளது.

அரசாங்கம் எடுத்த பல நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு எதிராக உள்ளது.

அரசாங்கம் பட்டியலிட்டுள்ள அமைப்புகள் ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து சமூகங்களும் ஏற்றுக்தொள்ளும் அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பின் ஊடாக தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்கி வருகின்றன எனவும் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளே ☞ தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

# வீதியைக் கடக்க முற்பட்ட சிறுமியை மோதியது மோட்டார் சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட சிறுமி ஒருவர் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த வ.துளசிகா (வயது 8) என்ற சிறுமியே படுகாயங்களுக்குள்ளாகினர்.

இவர் சம்பவ இடத்தில் இருந்து இவரை மோதிய மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரினால் யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(பா)

# வலிகாமம் கல்வி வலய சமூக விஞ்ஞானப் போட்டி

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிற்கிடையே நடைபெறவுள்ள சமூக விஞ்ஞானப் போட்டி இந்த மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

சங்கானைக் கோட்டப் பாடசாலை மாணவர்களிற்கான மேற்படி எழுத்துப் பரீட்சைப் போட்டி வட்டு.இந்துக் கல்லூரியிலும் சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலை மாணவர்களிற்கான போட்டி மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் உடுவில் கோட்டப் பாடசாலை மாணவர்களிற்கான போட்டி இணுவில் இந்துக் கல்லூரியிலும் தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலை மாணவர்களிற்கான போட்டி மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களிற்கான சுட்டிலக்கத்தினை ஒவ்வொரு கோட்டக் கல்விப் பணிமனைகளி லும் 29 ஆம் திகதி பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(06)

University of Jaffna
Professor S.Krishnarajah Memorial Lecture
Understanding Hermeneutics and Postmodernism from Indian perspective
Speaker- Dr.S.Panneerselvam (University of Madras)
Venue- Kailasapathy Auditorium University of Jaffna
Date- 27.05.2014
Time- 2.30 pm
All are cordially invited
Register
(C/3693)

அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 258
திகதி - 2014.05.23
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து
16 34 36 61 R

பரிசுத் தொகை ரூபா. 19,320,240/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 08 | 400,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 221 | 221,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 407 | 407,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9519 | 571,140/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4895 | 195,800/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 124816 | 2,496,320/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18182 | 363,640/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 19,320,240/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,654,900/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 19,564,260/-

2014.05.27ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/367

# ஒற்றுமையை வலுப்படுத்த யாழில் சர்வமதக் குழுவினர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு-தெற்கு மக்களின் ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கில் சர்வமதக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

நேற்று மாலை 5 மணியளவில் நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் திருஞான சம்பந்தர் மண்டபம் வரை முன்றலில் இருந்து இவர்கள் வரவேற்கப்பட்டு அங்கு அறிமுக நிகழ்வு இடம் பெற்றது.

இந்து, கிறிஸ்தவ, பௌத்த மற்றும் இஸ்லாம் மதத் தலைவர்கள் 45 பேர் இக் குழுவில் அடங்கியுள்ளனர்.

இங்குள்ள மக்களோடு கருத்துக்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சகோதரத்துவம், சமாதானம், நட்புறவு சுகவாழ்வு என்பவற்றை ஏற்படுத்த முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

3 நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அனைத்து மத மக்களுடனும் கலந்துரையாடி அவர்களின் நிலைப்பாட்டை தென்பகுதியில் உள்ள மக்களுக்கு தெளிவுபடுத்துவதன் மூலம சுகவாழ்வு ஏற்படுத்தும் நோக்கில் தாங்கள் இங்கு வந்ததாக இக் குழுவினர் தெரிவித்தனர். (25)

# கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள வாய்க்கால் கானுக்கடியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை குறித்த களப்புக்கடியில் குண்டு ஒன்று இருப்பதைக் கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்தே அப்பகுதிக்கு வந்த பொலிஸார் குண்டை மீட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (25)

சிறுநீரகம் தேவை
B+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை
தொடர்பு- 0750979195
(C/3694)

# போக்குவரத்துக்கு தகுதியற்ற பேருந்துகள் சேவையில்

## மன்னார் மக்கள் கவலை

(மன்னார்)

இலங்கை பேருந்து சபையின் மன்னாரில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் போக்குவரத்துக்கு தகுதியற்றவையாக காணப்படுவதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடமுடியாத நிலையிலான பேருந்துகளே பல்வேறு பகுதிகளுக்கும் தமது சேவை களை மேற்கொண்டு வருகின்றன. நீண்டகாலமாக இப்பகுதிக்கு புதிய பேருந்துகள் வழங்கப்படவில்லை. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனமெடுத்து சிறந்த புதிய பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அகற்றப்பட்டது இராணுவ முகாம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் கிராமிய வைத்தியசாலைக்கு அருகில் அமைந்திருந்த இராணுவ முகாம் நேற்று முன்தினம் அகற் றப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை அமைந்திருந்த பகுதிக்கு அருகாக இராணுவத்தினர் படை முகாமொன்றை நிறுவியிருந்தனர்.

இந்நிலையில் மண்டைதீவு கிராமிய வைத்தியசாலை புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்திருக்கும் நிலையில் அப்பகுதியில் இருந்த இந்த இராணுவ முகாம் நேற்று முன்தினம் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (பா)

# ஆதிவிநாயகர் இரதோற்சவம்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை காலை 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் அன்றைய தினம் காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி தொடர்ந்து 10.30 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

(104)

## சிறு விளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகை தரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும், குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். தொ.பே-0710854068.

□ □ □ □ □

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 - 55 வரையான ஆண், பெண் தேவை. சம்பளம் 18,000.00-35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். தொ.பே-0775964299 (R/348)

□ □ □ □ □

### டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)

# உளசமூக பிரச்சினைகளை முறையிட புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம்

## வைத்திய கலாநிதி சிவயோகன் தகவல்



(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் உள சமூக பிரச்சினைகளை முறைப்பாடு செய்வதற்கு யாழ்.சுகாதார திணைக்களத்தால் 021 - 222 6666 என்ற தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இச்சேவை எதிர் வரும் யூன் மாதம் முதலாம் திகதி முதல் செயற்படும். சிறுவர் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறை, பாலியல் சார் பிரச்சினைகள், தற்கொலை இவற்றுக்கான ஆலோசனைகள் இதன் மூலம் வழங்கப்படும் என உளசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சிவயோகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படும் சிறுவர்களின் உள சமூகம் சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டபோதே அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

தொடர்ந்து துறைசார்ந்த அதிகாரிகளால் யாழ்.மாவட்டத்தில் தற்போது சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறைந்துள்ளதாக புள்ளி விபர ரீதியில் கூறப்பட்டது.

பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி, முறைப்பாட்டு பெட்டிகளை வைத்து அதன் ஊடாக மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும். இவ் முறைப்பாட்டு பெட்டிகளை பிரதி வெள்ளிக்கிழமைகளில் ஆராய்வு செய்யப்படும் என்று கூறப்பட்டது. இதற்கு பிரதேச செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பொறுப்பாக இருப்பார் என்று கூறப்பட்டது.

சில பாடசாலைகளில் மாணவர்கள் வராவிடினும் உலக உணவுத் திட்டத்திற்காக வரவு பதியப்படுகிறது எனவும் க.பொ.த சாதாரண தர மாணவர்களை புள்ளிகள் குறைவாக எடுக்கும் காரணத்தால் பரீட்சை எழுத சில பாடசாலைகள் அனுமதிப்பதில்லை, என்ற முறைப்பாடும் கிடைக்கப் பெறுவதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மாதத்தில் இரண்டு நாள்கள் பிரதேச சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படுவதாகவும் பாடசாலைகளை இலக்குவைத்து நடாத்தப்படுவதாகவும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவதாக கூறப்பட்டது. இதற்குப் போதிய விழிப்புணர்வுகளை பாடசாலை மட்டங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு பிரதேச செயலர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், சுகாதார திணைக்கள அதிகாரிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், முன் பிள்ளை பருவ உத்தியோகத்தர்கள், உள ஆற்றுப்படுத்துன உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (25)

## ஓவியக்கண்காட்சி

(யாழ்.நிருபர்)

பாடசாலை மட்ட ஓவியக்கண்காட்சி கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மகிந்தோதய ஆய்வுகூடக் கட்டடத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.அகிலதாஸ் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் சித்திரபாடம் கற்கும் மாணவர்களையும் பாடசாலை ஆசிரியர்களையும் இக்கண்காட்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொறுப்பாசிரியர் த.கீதப்பிரியன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

## வருடாந்த அலங்கார உற்சவம்

யாழ்.ஆவரங்கால் மேற்கு சாந்தா தோட்டம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் பகல் 11 மணிக்கு அபிஷேக பூசை நடைபெற்று வருவதுடன் 11 ஆம் நாள் பரணி நட்சத்திரமான எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கும்பாபிஷேகதினம் மணவாளக்கோல உற்சவம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 108 சங்காபி ஷேகமும் விசேட பூசையும் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (85)

# கர்ப்பிணித் தாய்மாருக்கான விழிப்புணர்வுச்செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மாருக்கான சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வுச் செயலமர்வொன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை நடைபெற்றது.



பாரதிபுரத்திலுள்ள சுகாதார பராமரிப்பு அலுவலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். தர்சனன், கிளிநொச்சி மாவட்ட செயல்கத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அதிகாரி இராஜரட்ணம் செந்தூரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் நிதி அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 60 பேர் கலந்து கொண்டனர். (90)

## 'கெடு குடி சொல் கேளாது'




இந்தியாவின் புதிய பிரதமராக மோடி பதவியேற்கிற நிகழ்வுக்கு மகிந்தரைக் கூப்பிட்டிருக்கினமெல்லோ...

மகிந்தருக்கு எதிராக தமிழ்நாட்டில எத்தினை கறுப்புக் கொடியைக் காட்டினாலும் டில்லி செங்கம்பளத்தை விரிக்கத்தான் போகுது எண்டது தெளிவு.

மோடி வந்தால், காங்கிரஸ் போய் பாரதிய ஜனதாக் கட்சி வந்தால் மகிந்தற்றை ஆட்டமும் கொழும்பின்ரை கூத்தும் அடங்கீடும் எண்டு கன சாத்திரிமார் சோதிடம் சொன்னவை.

கொழும்பும் டில்லியும் எப்பவும் ஒரே மாதிரித்தான் சிந்திக்கும் எண்டது கனபேருக்கு விளங்கிறேல்ல.

அப்பிடித்தான் தப்பித்தவறிக் கொஞ்சம் மாறிச் சிந்திச்சாலும் அதில கனக்க வேறுபாடிருக்காது.

இதில தமிழர்கள் என்ன செய்யலாம் எண்டு சிந்திக்கோணும்.

இப்ப நல்ல ஒரு சான்ஸ் விக்கியருக்கு வந்தது, 'வாங்கோ விக்கியண்ணை, ஒருக்கால் இந்தியாவுக்குப் போயிட்டு வருவம். மோடியர் கூப்பிடுறார். ஒண்டாப்போனால் கதைக்க வேண்டியதைக் கதைச்சு, செய்ய வேண்டியதைச் செய்து கொண்டு வந்திடலாம்' எண்டு மகிந்தர் கூப்பிட்டார். ஆனால், இதுக்கு மறுத்து அதையும் விக்கியர் பழுதாக்கிப்போட்டார்.

விக்கியருக்கு உள்ளூர டில்லிக்குப் போக விருப்பம். அப்பிடிப்போனால், இந்த 13 க்கு மேலயா கீழயா எண்ட பிரச்சினையையும் கதைக்கலாம். அப்பிடியே போரில பாதிக்கப்பட்டிருக்கிற சனங்களுக்கு எண்டு இந்திய உதவிகளையும் கேட்டுக் கொள்ளலாம். அதோட மாகாணசபைக்கும் ஏதாவது உதவி செய்யுங்கோ எண்டு கேட்கலாம்... போற பயணம் நல்லாக இருக்கும் எண்டு அவருக்குத் தெரியும்.

ஆனால், அங்க டில்லிக்குப்போறன் எண்டு ஒரு சொல்லுச்சொன்னால் போதும் தன்ரை உள்ளாடையைக் கூட தன்னோட கூட இருக்கிற ஆட்கள் கிழிச்சிடுவாங்கள் எண்டு அவருக்கு நல்லாய்த்தெரியும். இதால பிச்சையும் வேண்டாம். நாயும் வேண்டாம் எண்ட கணக்கில ஆள் அப்படியே காய் வெட்டிப்போட்டுச் செத்தேன் சிவனே எண்டிருக்குது.

உண்மையில விக்கியண்ணைக்கு இது ரண்டாந்தடவை விழுந்த சுவீப்டிக்கெற்.

ஆனால், அவர் ரண்டாந்தடவையும் இதைத் தவற விட்டிட்டார் எண்டுதான் சொல்லோணும்.

முதல்ல சார்க் மாநாட்டுக்கு கொழும்புக்கு வாறதுக்கு மன்மோகன் சிங் வெளிக்கிட அவருக்குக் கறுப்புக்கொடி காட்டி ஆளை அங்க நிப்பாட்டிப் போட்டினம். அப்ப விக்கியர் சரியாக அதைக் கையாண்டு மன்மோகனைக் கூப்பீட்டு அப்பிடியே வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கும் கூட்டிக்கொண்டு போய்க்காட்டி நிலைமைகளை விளங்கப்படுத்திக் கன காரியங்களைப் பார்த்திருக்கலாம்.

அப்படிக் காரியங்களைப் பாக்கிறதுக்குத்தானே இந்த முதலமைச்சர் பதவி. அதை விட்டுப்போட்டு தன்ரை காரியம் பாக்கவோ, தங்கட கட்சிக்கான லாப நட்டக் கணக்குப் பாக்கவோ இதை வைச்சுக்கொண்டிருக்கேலாது எல்லோ.

அப்ப மன்மோகனுக்கும் சப்போர்ட் பண்ணேல்ல. அந்த நேரம் மன்மோகனுக்குச் சப்போர்ட் பண்ணியிருந்தால் அப்பிடியே 13 ஆவதையும் ஒரு மாதிரி அவரைக்கொண்டே சீராக ஒப்பேற்றியிருக்கலாம்.

அதைப்போல இப்ப கூட ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்தது. அதையும் மகிந்தரே கையில எடுத்துக்குடுத்திருக்கிறார். ஆனால், விக்கியண்ணை தன்ரை ஆக்களை நினைச்ச பயக்கெடுதியில அப்படியே கீழ போட்டு உடைச்சிட்டு நிக்கிறார்.

இப்ப விக்கியண்ணை டில்லிக்குப் போயிருந்தால் மகிந்தரை வைச்சே மோடியரை மடக்கியிருக்கலாம்.

ஆனால் என்ன செய்யிறது? உதெல்லாம் சரிப்பட்டு வராது. நாங்கள் தனிய மோடியரைச் சந்திப்பம். இப்ப மகிந்தர் எங்களை வைச்சுத் தன்ரை காரியத்தைப் பாக்க ட்ரை பண்ணுறார். உதுக்கு நாங்கள் இடங்குடுக்க மாட்டம். தான் இந்தியாவுக்குப் போறதுக்கு தமிழ்நாட்டில எதிர்ப்பிருக்கிறதால, இப்பிடி விக்கியரையும் கூட்டிக் கொண்டு போனால் அந்த எதிர்ப்பைச் சமாளிச்சிடலாம் எண்டு யோசிக்கிறார். இதுக்கு நாங்கள் பலியாக மாட்டம் எண்ட மாதிரி ஒரு கணக்கை வைச்சுத்தான் இந்த மறுப்பு அரசியல் நடந்திருக்கு.

இதுக்கு நாங்கள் என்னதான் செய்ய ஏலும்? 'கெடு குடி சொல் கேளாது' எண்டு எங்கட முன்னோர் சொன்னதில தப்பே இல்லை.

தமிழர்களுக்கு ஆர்தான் நல்லதைச் சொன்னாலும் அவை அதை ஒருக்காலும் கேட்க மாட்டினம்.

அது ஒரு தனிக்குணம். பிறவிக்குணம் எண்டும் அதைச் சொல்லலாம். ஏன் தமிழர்கள் உலகிலேயே அதிசயமான ஒரு கூட்டம் – 'தனிப்பிறவிகள் எண்டு கூடத் தோன்றுது.

என்னதான் நல்லது கிடைச்சாலும் அதை வாங்கவோ, வைச்சிருக்கவோ தெரியாது தமிழாக்களுக்கு.

கிடைக்கிற வாய்ப்புகளை வைச்சே நன்மைகளை அடையத்தெரியாது. சும்மா வெத்து வேட்டுப் பேச்சுப்பேசத்தான் தெரியும்.

மோடி என்ன எங்கட சித்தப்பாவின்ரை பிள்ளையா... நாங்கள் நினைக்கிறதெல்லாத்தையும் அள்ளித்தரவும் அனுமதிக்கவும்?

டில்லிக் கோட்டையின்ரை கோடு கிழிப்புக்கு மாறி அவர் ஒரு நாளும் சிந்திக்க மாட்டார். தலையாட்டவும் மாட்டார். இதையெல்லாம் விளங்கக் கூடிய மாதிரி இருந்தால் தமிழ்க்குடி ஏன் இன்னும் இப்பிடிக் கிடந்து சீரழியுது?

இதாலதான் –இந்தப் பேய்குணத்தாலதான் இந்த மூத்த குடி மூதேவிக்குடியாக இருக்கு.

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இதற்குத்தானா எமக்குத் தலைவர்கள்!

குளத்தோடு கோவித்துக் கொண்டால் காலகாலத்துக்கும் எதையும் கழுவாமலே இருந்துவிடக் கூடிய ரோசக்காரர்கள் தமிழர்கள் என்று சொன்னார் நண்பர். இதைப் பாராட்டாகத்தான் எடுத்துக் கொள்வோம்; நீங்கள் வருத்தப்பட்டுச் சொல்வதாக எண்ணி குணத்தை மாற்றிக் கொள்ளுமளவுக்கு நாங்கள் ஒன்றும் சுணைமணையற்றவர்கள் அல்லவே என்று ஏத்தமுடன் சொல்லிவிட்டு, ஏன் இப்ப இந்தக் கருத்து? என்று கேட்டோம்.

"இந்தியப் பிரதமர் பதவியேற்புக்கு ஒன்றாய்ச் சேர்ந்து போய்ப் பேசிவிட்டும் வரலாம் வாங்கோ" என்று, எதிரி நாட்டுத் தலைவர் மடங்கிப்போய்க் கேட்டால் மசிந்து விடுவமா தமிழர்கள்? கேட்டு வாய் மூட முன்னம் மறுத்துப் பதிலடி கொடுத்து விட்டிருக்கிறோமே, பார்த்தீர்களா? என்று தமிழ்ப் பெருமிதத்தைத் தன் குரலில் காட்டிச் சொன்னார் நண்பர்.

இலங்கை அரசு எங்களுடையதில்லை; எதிரி நாட்டவர்களின் அரசு அது; அதனுடன் எங்களுக்கு எப்போதும் தீராப் பகை இருக்கிறது; இந்த நாட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பற்றி அதனுடன் எமக்குப் பேச ஒன்றுமில்லை; சர்வதேசம் மிரட்டுகிற மிரட்டலில் அவர்கள் எங்களிடம் தீர்வைப் பிடியுங்கள் என்று கெஞ்ச வேண்டும்; அதுவும் தமிழ் ஏகப்பிரதிநிதிகளிடம் மட்டுமே வந்து விழுந்து கெஞ்சட்டும் அப்போது என்ன செய்யலாம் எனப் பார்ப்போம்....

இவ்வாறுதான் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் – சிந்திப்போம். இப்படித்தான் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையை எடுங்கோ என்று ராஜீவ் காந்தி சொல்லிப் பார்த்தார் –தளம்புவமா நாங்கள்? பிறகு 2002ல சந்திரிகா அம்மையார், கிட்டத்தட்டச் சமஷ்டிதான் இது எடுங்கோ என்று ட்றை பண்ணிப் பார்த்தா – ஆரிட்ட விடப்பாக்கினம் எண்டு பார்ளிமென்டிலயே கூடிநிண்டு அதைக் கொளுத்தினம்....

பிறகு இப்ப இலங்கையில் அணிசேரா மாநாடு நடந்த நேரமும், மன்மோகன் சிங் கடிதம் எழுதச் சொல்லிக் கேட்டு எங்களை வளைக்கலாம் எண்டு பாத்தவர் – என்ன, போயிருந்தா 13ஐ எடுங்கோ, அதுக்கு அதிகாரங்களைக் கூட்டித் தாறதைப் பார்க்கிறம் எண்டு ஐஸ் வைச்சிருப்பர்.... அதுக்கெல்லாம் குளிர்ந்திடுவமே நாங்கள்!

இப்ப, மோடியோடு பேசலாம் எண்டு மகிந்த கேட்கிறார் – இவரோட போய்ப் பேசினால், ஏதேனும் தீர்வுக்கு இணங்கிறதாய் எல்லோ கடைசியில வரும். நாங்கள் தனியப் போய் மோடியைச் சந்திச்சு இலங்கை அரசு சரிவராது எண்டதைச் சொல்ல வேணும்.... அவரும் இவர்கள் ஒருத்தரும் சரிவரமாட்டினம் என்று விட்டிட்டுத் தன்ர அலுவலைப் பார்க்கோணும்....

நாங்களும் எங்களின் தலைவர்களாக இங்கு சொல்லிக் கொள்பவர்களும் இப்படித்தானே நினைத்துப் போய்க் கொண்டிருக்கிறோம்? மக்களின் கஷ்டங்கள் அவலங்களுக்கு மேலாக எங்கள் ரோசம் இனப்பெருமை இவற்றையே முன்னிறுத்தி அரசியல் செய்துகொண்டிருக்கிறோம்.

நம்முள்ளிருக்கும் வீம்பு, பெருமை, ரோசம், தன்முனைப்பு ஆகியவற்றைத் தாண்டி, நமக்கு வெளியே நினைக்கும்போதுதான் பல்லாயிரக்கணக்கானோரின் கஷ்டங்களை எண்ண முடியும். பெருந்தொகை மக்களின் வேதனைகளை நினைவில் தேட முடியும்.

அரசாங்கம் எதையும் தரத் தயாராக இல்லை, சர்வதேசம் அரசை மிரட்டுவதாயுமில்லை, அமெரிக்கா, ஐநாவும் போர்க்குற்றத்திற்கு அரசைச் சிறையில் தள்ளக் காணோம்... உலகம் நம் பிரச்சினையில் எதையாவது செய்யத்தானே வேணும்... என்று சொல்லிக்கொண்டிருக்க எதற்குத் தலைவர்கள்? - ஆசிரியர்

# ஒருங்கிணைப்புக்குழுக்கூட்ட குறிப்புக்கள் கிடைக்கவில்லை

## திணைக்களத்தலைவர்கள் கவலை

கடந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கூட்ட அறிக்கை இதுவரை யாழ்.அரச அதிகாரிகளால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என யாழ். மாவட்ட திணைக்களத்தலைவர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கடந்த 21.04.2014 இல் இணைத்தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த கால கூட்ட அறிக்கை அங்கீகரித்தலும் மற்றும் அறிக்கை பிரகாரம் எழும் விடயங்களும், அனுமதிக்காக திட்டங்கள் சமர்ப்பித்தல் மற்றும் முதலாவது விவசாய துறை ரீதியான முன்னேற்றத்தின் நீர்பாசணத் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்ட நிலையில் அடுத்த கூட்டம் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்ட நிலையில் கூட்டம் முடிவுக்கு வந்தது.

இந்நிலையில் மேற்படி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் 34 நாட்களின் பின்னர் மீள நாளை திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமையும் (26, 27 - 05 - 2014) இடம் பெறவுள்ளது.

எனினும் கடந்த மாத கூட்ட அறிக்கை ஏற்கனவே அனுப்பப்படாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள் குழப்பமடைந்துள்ளனர். கடந்த வருடம் கூட்டறிக்கை விடயத்தினால் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் சர்சைக்குள்ளாகியது தெரிந்ததே. (92)

# புதிய பாணியில் அரங்கேறும் தெற்கில் பண மோசடி

(கொழும்பு)

தொழிலுக்காக வெளிநாடு சென்றுள்ளவர்களின் வீடுகளில் பணமோசடியில் ஈடுபடுகின்ற நடவடிக்கை தொடர்பிலான தகவல்கள் வெளியாகியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிடுகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பிரதிநிதிகள் என்ற போர்வையில் போலி அடையாள அட்டையுடன் சிலர் பண மோசடியில் ஈடுபட்டிருப்பதாக பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதிப்பொது முகாமையாளருமான மங்கல ரன்தெனிய தெரிவித்தார்.

வீடுவீடாகச் சென்று பணம் திரட்டும் நடவடிக்கைகள் எதனையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் முன்னெடுக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். காப்புறுதி இழப்பீடு வழங்கப்படுவதாக தெரிவித்து, அதன்பொருட்டு குறிப்பிட்ட தொகை பணத்தை மோசடிப் பேர்வழிகள் சிலர் அறவிடுவதாக தகவல்கள் கிடைத்திருப்பதாக பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இத்தகைய பண மோசடியில் ஈடுபடுகின்ற எவரேனும் வெளிநாட்டு தொழில் புரிவோரின் வீடுகளுக்கு சமுகமளித்தால், அவர்கள் குறித்து உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலைய பணியகத்திற்கு அறிவிக்குமாறு மங்கல ரன்தெனிய கேட்டுக்கொண்டார்.

# அரசு விரைவில் உடையும்; ஐ.தே.கட்சி எம்.பி.ஆருடம்

(கொழும்பு)

கொழும்பு மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களில் பாரியளவில் ஹெரோயின் விற்பனையாளர்கள் இருக்கும் நிலையில், அரசாங்கம் தேனீர்க் கரண்டியில் ஹெரோயின் வைத்திருப்போரை கைது செய்து போதைப் பொருள் விற்பனையாளரைக் கைது செய்துள்ளதாக கூறுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெற்காசியாவில் மிகப் பெரிய ஹெரோயின் விற்பனையாளர் விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவரான கே.பி என அரசாங்கம் கடந்த காலங்களில் கூறியது.

அவரிடம் 16 கப்பல்கள் இருப்பதாகவும் சுவிஸ் வங்கியில் கோடிக்கணக்கில் பணம் இருப்பதாகவும் கூறியது. ஆனால் அவற்றுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது.

கொழும்பு மற்றும் நீர்கொழும்பில் பாரிய போதைப் பொருள் விற்பனையாளர்கள் இருக்கும் நிலையில், அரசாங்கம், சந்திகளில் இருக்கும், தேனீர்க் கரண்டியில் போதைப் பொருளை வைத்திருக்கும் இளைஞர்களை கைது செய்து, போதைப் பொருள் விற்பனையாளர்களை பிடித்து விட்டதாக கூறிவருகிறது.

கொள்கலன்களில் ஹெரோயினும் எத்தனோலும் கொண்டு வரப்படுகிறது. அரசியல்வாதிகளின் ஒரு கடிதம் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கு அவை விடுவிக்கப்படுகின்றன.

அரசாங்கம் சுறாக்களை விட்டு விட்டு, நெத்தலி மீன்களை பிடித்து வருகிறது. விரைவில் இந்த தூள், அரசாங்கம் தூள் தூளாக உடையும் எனவும் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# கோடிக்கணக்கில் இழப்பு பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துக்கு

## அமைச்சர் யாப்பா தகவல்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை 10 ஆயிரத்து 500 கோடி ரூபா இழப்பை சந்தித்துள்ளதாக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனம் 2015 ஆம் ஆண்டு ஆயிரத்து 400 கோடி ரூபாவையும் 2016 ஆம் ஆண்டு ஆயிரத்து 600 கோடி ரூபாவையும் இலாபமாக பெற உத்தேசித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.


இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 3 ஆயிரத்து 500 கோடிரூபா முதலீட்டையும் 24 ஆயிரம் கோடி கழி ஒதுக்கத்தையும் கொண்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் 2 ஆயிரத்து 574 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.


சில பதவிகளுக்கு மேலதிகமான ஊழியர்கள் இருப்பதுடன் சில பதவிகளுக்கு வெற்றிடங்களும் நிலவுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் குறுகிய காலக்கடன், வங்கி மேலதிக பற்று, மத்திய கால கடன், நீண்டகால கடன் என மொத்த கடன் 44 ஆயிரத்து 700 கோடி ரூபாவாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா இந்த ஆவணத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.



# உண்ணாணை இதைக் கேளுங்கோ...




"பேரில் என்ன இருக்கிறதாமோ" எண்டொரு கவிதை சிவசேகரம் முந்தி எழுதியிருந்தவரெல்லோ... நியூமரோலஜி பேர் மாத்துகை ஆட்டங்களைக் கிண்டல் பண் ணினது அந்தக் கவிதை.

உண்மையில இலக்கியக் காரர்களில தருமு சிவராம் தான் அப்ப அதுக்குப் பேர்போனவராக இருந்தார். ஒரே ஊர்க்காரரும் கூட.

பிரமிள், ப்ருமீள், அரூபச் சௌந் ப்ரேமிள், ஜ்யோவ்ராம் அரூப் பிருமிள், பிர்மில் பாநுசந்ரென், தர்மு சிவ ராமூ, தர்மோ அரூப் சீவராம், தருமு ஔரூப் சீவராம் என்றெல்லாம் விதவிதமாக பேர்களைக் கலைத்துப்போட்டு அடுக்கி விளையாடிக் கொண்டிருந்தவர் அவர்.

காணுற மற்றவர்களுக்கும் எல்லாம் பேர் மாத்திக் குடுத்துக் கொண்டிருந்தவர்...

எனக்கு உந்த நியூமரோலஜி நம்பிக்கை யெல்லாம் இல்லாட்டிப் போனாலும், பேரை மாத்தியாக வேண்டிய நெருக்கடி சின்ன வயசிலேயே ஏற்பட்டுப் போச்சு...

பின்னை, சுப்பர் எண்டு சொல்லிக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கேலுமே? உண்ணாணைச் சுப்பர் உன்ர கொப்பர் பேரென்ன வப்பரோ இல்லை மப்பரோ எண்டெல்லே நிப்பாங்கள்...

பிறகு பேரச் சொல்லிப்போட்டுப் பெட்டையளும் அடக்கமாட்டாமல் கொடுப்புக்குள்ள சிரிச்சுக் கொண்டு போறதைத் தான் தாங்கியிருக்கேலுமே...

அப்பவே சுப்புராஜ் எண்டு மாத்தி வைச்சிட்டன். இந்த ஜ், ஸ், ஷ் எண்டு பேர் முடியேக்க வாற ஸ்டைலே தனிதான்...

கிட்டடியில வந்த எதிர்நீச்சல் படத்தில குஞ்சிதபாதம் எண்ட பேருக்கே வெக்கப்பட்டு எட்டாய் நெளிஞ்சுகொண்டு திரிவார் சிவகார்த்திகேயன். சுப்பர் எண்டதுக்கு நான் என்ன பாடுபட்டிருக்கவேணும் யோசிச்சுப் பாருங்கோ...

பக்கத்தில ஃபமிலி ட்றீ படத்தைப் பாத்தா உங்களுக்கு விளங்கும்... பரம்பரைப் பேராம்! கண்டறியாத பரம்பரை!

அதவிடுங்கோ, நான் சொல்ல வந்தது பேரைப் பற்றியில்லை... குணத்தைப் பற்றி. ஓமோம் தமிழ்க் குணம் பற்றித்தான்!

"தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவர்க்கொரு குண முண்டு" எண்டு நாமக்கல் கவிஞரோ ஆரோ சொல்லியிருக்கினம் எல்லே?

இப்பெல்லாம் இப்பிடிச் சந்தேகப்பட்டு எழுதத் தேவையில்லை... கூகிள்ல தட்டினா விசயம் பட்டெண்டு வந்துவிழும் பிறகெதுக்கு ஆரோ இவரோ கதையெல்லாம் எண்ணுவியள்..:

எனக்கு உந்தக் கொம்பியூட்டர் மட்டும் இன்னுஞ் சரிவருகுதில்ல... பெடியனும் எனக்குதைப் பழக்கி விட்டிடுவம் எண்டு தலையால நடந்துதான் பாத்தவன்...

எனக்கோ மிசினுக்கு முன்னால போய் இருந்தாலே உதைப் பழுதாக்கி விட்டிடத்தான் போறன் எண்டு கைகால் பதறுது... என்ன செய்ய?

பாத்தியளே... இதைத்தான் விக்கெற்றை விட்டு விலகிநிண்டு விளையாடிற தெண்ணிறது... ஏதோ விசயத்தைச் சொல்லவந்து மிலாந்திக்கொண்டு எங்கயோ போயிடுவன்...

எழுத்து தன்னைத்தானே எழுதிக் கொண்டு போகுது எண்டு கோணங்கி மாதிரி அடிச்சுவிடலாம்தான்... அந்தளவுக்கு "தில்" இல்லை எனக்கு.

"விக்கெற்றை விட்டு விலகி" எண்டவுடன உவன் டி வில்லியர்ஸ் பெடியன்ர ஞாபகம் வருது... என்ன ஒரு யமகிங்கரனாயிருக்கிறான் பாருங்கோ...

மட்டையைப் பிடிச்சு ஒரு இடத்தில நிக்கிறானில்ல... விக்கெற் அதுபாட்டுக்கு கிடக்கட்டும் எண்டு அத விட்டுட்டு அங்கயும் இங்கயுமாய் நடந்தபடி திரியிறான்... கைமட்டையும் அவன் நினைச்ச நினையாத பக்கமெல்லாம் சுழலுது...

பிரேசில்காரருக்கு கால்பந்து எண்டது விளையாட்டில்ல அவங்களுக்கு அது ஒரு நடனம் எண்டு சொல்லுவினம்... அப்பிடியொரு நடனம் தான் இவன் வில்லியர்ஸ் பெடியன்ர துடுப்பாட்டமும்...

அதுகும் அந்த ஹைதராபாத்காரரோட கடைசி ஓவர்கள் விளையாடேக்க பாத்தனீங்களே!

ஓம்...ஓம்... பிறகும் விசயத்த விட்டு விலகியிட்டன்... அலம்பிக்கொண்டும் போறன் போல... வாறன்... விசயத்துக்கு வாறன்...

சொல்லவந்த தமிழ்க் குணங்களில ஒண்டையாவது சொல்லாமல் போகக் கூடாது. பிறகு, நீ விக்கெற்றை விட்டு விலகியில்லயப்பு... கிறவுண்டுக்கு வெளியில நிண்டெல்லோ விளையாடிப் போட்டுப் போறாய் எண்டு பாணியம் விடுவியள்...

இப்ப ஒண்டாவது சொல்லத்தான் வேணும். தினமுரசில விட்டிச் சினமெண்டால் தமிழ்க் குணங்கள வாரம் ஒண்டாய்ச் சொல்லிக்கொண்டு வரத்தான் பிளான்... பாப்பம்.

தினமுரசில அமெரிக்க ராணுவக்காரன் சொன்ன கதையொண்டு வந்ததெல்லோ... வெற்றி தோல்வி கறாராய்த் தெரியிற மாதிரி யுத்தம் முடிஞ்சுதெண்டால், வெண்டவைக்கு நல்லிணக்கத்தைப் பற்றி யோசிக்கிற தேவை இல்லை - அதுதான் இயல்பு எண்டு.

அதாவது தோக்கப்போறம் எண்டு தெரிஞ்சால் முழுசாத் தோற்கிறக்கு முன்னம் என்னவிதப் பட்டாவது சண்டையை நிப்பாட்டிப் போட்டால்... அப்ப நல்லிணக்க சூழலைக் கட்டியெழுப்புறதுக்கான கடப்பாடு சண்டையை நிப்பாட்டினவைக்கு இருக்கிற தாப் பாக்கப்படுமாம்!

நாட்டுக்கெதிரான சண்டையை முழுசாத் தோற்கடிச்சாப் பிற்கு வெண்டவையிட்ட அத்தூகைய கடப்பாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கேலாது எண்டது அமெரிக்காக்காறன்ர பொயின்ற்!

தினமுரசில இதப் பாத்துப் போட்டு என்ர மனுசி எழும்பிச் சன்னதமாடிச்சுது. "இவ்வளவு சனத்தையும் கொண்டு போட்டு அப்பிடி அவை திமிராய் இருந்திடேலுமே! சர்வதேசம் பாத்துக்கொண்டு சும்மா இருக்குமே!!... என்ன விசர்க்கதை பறையிறாங்கள்..."

"எடி விசரி, தமிழ்ப் பேப்பர்கள வாசிச்சுப்போட்டு அதுக்கங்கால என்ன நடக்குதெண்டு விளங்காமல் நிண்டு ஆடாதையாத்தை....

முள்ளிவாய்க்காலுக்குச் சாய்பட்டுப் போகேக்கயும்... "சனத்தைக் கொல்லுறதெண்டால் சும்மாவே! அப்பிடிச் சனத்தைச் சாக சர்வதேசம் விட்டிடுமே! ஏதோ ஒரு கட்டத்தில வந்திடுவாங்கள்..." எண்டு சொல்லிச் சொல்லித்தானே போனனாங்கள்...

அத நல்லா அனுபவிச்சுத் தெரிஞ்சு கொண்டும் "நல்லிணக்கத்துக்கு அவை இறங்கி வராட்டில் சர்வதேசம் சும்மா விடுமே!" எண்டு இப்ப பிறகும் உதென்னடியாத்தை விசர்க்குணம்! எங்கட விருப்பத்துக்குத்தான் உலகம் சுழலுமெண்டு ஏனடியாத்தை ஒரேயடியாய் நாண்டு கொண்டு நிக்கிறியள்...

இஞ்ச நடக்கக் கூடிய அலுவலைப் பாக்காமல் "என்னைச் சிங்கப்பூரில கேட்டாங்கள்... சிக்காகோவில கேட்டாங்கள்... செவ்வாய்க்கிரகத்தில கேட்டாங்கள்..." எண்டு ஏனடியாத்தை உங்கட விறுத்தம் தெரியாமல் உலகம் உங்கட பின்னாலதான் சுத்துதெண்டு விலாசக் கதையில உங்களையே ஏமாத்திக் கொண்டு திரியிறியள்...

மனுசி இதொண்டையும் காதில வாங்காமல், "அப்ப அவை இறங்கிவந்து ஒண்டுங் கதைக்கேலாது எண்டு வெற்றிக் கொண்டாட்டத்தில இருந்தினமெண்டால் அவையைச் சும்மா விடுறதே... அவையின்ர திமிரை அடக்கத்தானே

> "எடி விசரி, தமிழ்ப் பேப்பர்கள வாசிச்சுப்போட்டு அதுக்கங்கால என்ன நடக்குதெண்டு விளங்காமல் நிண்டு ஆடாதையாத்தை.... முள்ளிவாய்க்காலுக்குச் சாய்பட்டுப் போகேக்கயும்... 'சனத்தைக் கொல்லுறதெண்டால் சும்மாவே! அப்பிடிச் சனத்தைச் சாக சர்வதேசம் விட்டிடுமே! ஏதோ ஒரு கட்டத்தில வந்திடுவாங்கள்...' எண்டு சொல்லிச் சொல்லித்தானே போனனாங்கள்...."

**கண்டாவளை சாத்திரி சுப்பர்**

வேணும்..."

"எடியாத்தை உப்பிடிக் கோவப்பட்டு கோவப்பட்டு என்னத்தையணை சாதிச்சனாங்கள்.... இஞ்ச பகைமறந்து நல்லிணக்கச் சூழல் வராட்டில், ஆருக்கு வலி எண்டதை விளங்க வேண்டாமே....

சிங்களச் சமூகமும் நியாயம் விளங்கின சமூகம்தான் எண்டு நம்பி நாங்கள்தான் அதை வெளிக்கொண்டு வாற விதமாய் பேச வேணும் மாற வேணும்...."

"உதென்ன ரோசங்கெட்ட கதை கதைக்கிறியள்... அவை வெண்ட திமிரில றாங்கியா நிப்பினம்... நாங்கள் ரோசங்கெட்டுப் போய் எங்களுக்கு அதைத் தாங்கோ இதைத் தாங்கோ எண்டு பல்லையிளிச்சுப் பேசவேணுமே...

என்னப்பா கதைக்கிறியள்... பரம்பரையில இல்லாத பச்சைத்தண்ணிக் கதை... படிக்கிற காலத்தில தருமபுரத்தில என்னட்ட ஒருதன் சுத்திச் சுத்தி வந்து நேரங் கேட்டதுக்கு பெண்டுகள் பெடியள் எல்லாம் ஆளுக்கொரு பட்டிக் கட்டையைப் புடுங்கிக்கொண்டு ட்றைக்ரர் பெட்டியில போய் இறங்கினனாங்கள் தெரியுமெல்லே....

அம்பது வருசமென்ன ஐநூறு வருசம் நாங்கள் பின்னடைஞ்சு போனாலும் போவமே தவிர அவையிட்ட மடிஞ்சு போய்ப் பேசவேணும் எண்டு மட்டும் என்ர காதில விழச் சொல்லாதையுங்கோ...."

ம்.... வீட்டுக்குள்ளயே இவள் தலையை விரிச்சுப்போட்டு நிண்டு ஆடுறாள்.... வெளியில நான் இதுகளைக் கதைக் கேலுமே.... விடுங்கோ மக்கள் உது சரிவராது நான் வாறன்.

பிறகு எப்ப வருவன்.. எப்பிடி வருவன் எண்டு சொல்லுறாக்கேலா... நானும் அவரப்போல அப்பப்ப வரவேண்டிய நேரத்தில வாறன் சரியே... வரேக்க மிச்சத்தைப் பறைவம்... வாறன்!

# எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் யார்?
## சிராணியின் பக்கம் திரும்புகிறது கவனம்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தும் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒன்றியம் ஒன்று ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பான இரகசியப் பேச்சுவார்த்தை ஒன்று கொழும்புக்கு அருகில் உள்ள விரிவுரையாளர் ஒருவரின் வீட்டில் நடந்துள்ளது.

ஊடகங்கள் வெளியிட்டு வரும் பொது வேட்பாளர்களில் ஷிராணி பண்டார நாயக்கவே மிகவும் தகுதியானவர் என இதன் போது பேசப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர் பில் முதலில் ஷிராணி பண்டார நாயக்கவின் இணக்கத்தை பெற்றுக் கொண்டு, அந்த தீர்மானம் குறித்து எதிரக் கட்சிகள் மற்றும் ஆளும் கட்சியின்



கூட்டணிக் கட்சிகளுடன் பேசசுவார்த்தை நடாதத திட்டமிடப்படவேண்டும் எனவும் விரிவுரையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொது வேட்பாளராக போட்டியிடப் போவதாக பரவலாக பேசப்பட்டு வரும் மாதுளுவாவே சோபித தேரருடனும் இது பற்றிக் கலந்துரையாடுவது எனவும் விரிவுரையாளர்கள் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# வீசா விண்ணப்பம் நிராகரிப்பு
## முன்னாள் படைத் தளபதிக்கு இந்த நிலை

ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்ய வழங்கப்படும் ஷெங்கன் வீசாவை (schengen visa) இலங்கை இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு வழங்குவதை ஐரோப்பிய ஒன்றியம் நிராகரித்துள்ளதாக தெரியவருகிறது.

ஜகத் டயஸ் ஜேர்மனிக்கான இலங்கையின் பிரதித் தூதுவராக பணியாற்றி வந்ததுடன் தூதரக சிறப்புரிமைகளையும் பெறறிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பிய அவர், மீண்டும் இராணுவத்தில் பணியாற்றியதுடன் இத்தாலி உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் நோக்கில், ஷெங்கன் வீசா கோரி விண்ணப்பத்திருந்தார். அவரது வீசா விண்ணப்பத்தை ஆராய்ந்த ஐரோப்பிய நாடுகள் அதனை நிராகரித்துள்ளன.



ஐரோப்பிய நாடு ஒன்றில் பிரதித் தூதுவராக பணியாற்றிய ஒருவருக்கு வீசா நிராகரிககப்பட்டமை முக்கிய விடயமாக கருதப்படுகிறது. போரின் இறுதிக் கட்டத்தில் 57 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக பணியாற்றி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், வைத்தியசாலைகள் மீது ஷெல் வீச்சு தாக்குதல்களை நடாத்தியதாக அவர், மீது போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஜகத் டயஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நான்கு விமான நிறுவனங்களே விமான நிலையத்தை பயன்படுத்துகின்றன
## மத்தள குறித்து ஐ.தே.க. கிண்டல்

மத்தள விமான நிலையத்திற்கு நான்கு விமானங்கள் மட்டும் செல்வதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாரிய பொருட் செலவில் தெறகின் மத்தளவில் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டது. ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், மிஹின் எயார் நிறுவனம், ப்ளை டுபாய் மற்றும் எயார் அரேபியா ஆகிய விமான சேவை நிறுவனங்களின் விமானங்களே மத்தளவில் தரையிறங்குகின்றன. புதிய விமானம் என்பதனால் விமானப் போக்குவரத்து அதிகரிப்பதற்கு கால அவகாசம் தேவைப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்தளவில் விமான நிலையம் அமைத்ததனால் நாட்டுக்கு எவ்வித பயனும் கிடையாது என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

# சிறுவர்களுக்கான தேசிய கொள்கை மறுசீரமைக்க ஆலோசனை

சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான தேசிய கொள்கை பிரகடனத்தை மீண்டும் புதுப்பிப்பது தொடர்பான விசேட கருத்தரங்கொன்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில், சுமார் பத்து வருடங்கள் பழைமை வாய்ந்த மேற்படி தேசிய கொள்கை பிரகடனத்தை திருத்தி அமைப்பது குறித்து பலராலும் வலியுறுத்தப்பட்டது.

சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பு குறித்தும் குறிப்பாக ஆராயப்பட்டது.

தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷமன் ஜயதிலக்க ,சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார்ர அமைச்சின் செயலாளர் எரிக் இளையப்ஆராச்சி, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் இந்த கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

# ரணில் - மனோ சந்திப்பு
## பொது வேட்பாளர் யார்?



ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

இதன் போது எதிர்க்கட்சி பொது வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதி செய்யும் வகையிலான செயற்பாடுகளை ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுக்க வேண்டும் என்று மனோகணேசன் கோரியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ரணில் விக்ரமசிங்க, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை ஒன்றிணைதது, புதிய பொது எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவது குறித்த தமது எண்ணப் பகிர்வை வெளிப்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ப்தவி உயர்வில் முறைகேடு எதிர்த்து நீதிமன்றில் வழக்கு
## பொலிஸ் திணைக்களம் மீது கண்டனம்

பொலிஸ் திணைக்களத்திற்கு எதிராக பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீதிமனறில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

பதவி உயர்வுகள் தொடர்பல் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து இவ்வாறு உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

218 பொலிஸ் பரிசோதகர்களுக்கு பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவி வழங்கப்பட்டுள்ளதுடன், 12 பெண் பொலிஸ் பரிசோதகர்களும் பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

எனினும், இந்தப் பதவி உயர்வுகளை இரத்துச் செய்யுமாறு கோரி நேற்றுமுன்தினம் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 75 உபபொலிஸ் பரிசோதகர்களினால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் பத்து ஆண்டுகளுக்கு மேல் உப பொலிஸ் பரிசோதகர்களாக கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு ஆண்டுகள் உப பொலிஸ் பரிசோதகர்களாக கடமையாற்றிய பலருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்து அபராதம் விதிக்கப்பட்டு, ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு வரும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர், சட்டம் ஒழுங்க அமைச்சின் செயலாளர், பதவி உயர்வு பெற்றுக்கொண்ட 129 உப பொலிஸ் பரிசோதகர்கள் உள்ளிட்டவர்கள் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# அதிகாலை நடந்த கொலை பல்கலைக்கழக மாணவி பலி
## எல்பிட்டிய நகரில் கோரம்

எல்பிட்டிய நகரிலுள்ள பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் பல்கலைக்கழக மாணவி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். நியாகம, தல்கஸ்வல பகுதியைச் சேர்ந்த 21 வயதான யுவதி ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிடுகின்றார்.

இந்த யுவதி கொழும்பு நோக்கி வருவதற்காக நேற்று அதிகாலை மூன்று மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரயவந்துள்ளது. யுவதியுடன் தொடர்பு வைத்திருந்த ஒருவரிடம் இந்தக் கொலை சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். யுவதி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான விரிவான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# இராஜதந்திர கடவுச் சீட்டு வழங்குவதில் முறைகேடு
## ஐ.தே.கட்சி போர்க்கொடி

(கொழும்பு)

இராஜதந்திர கடவுச் சீட்டுக்களை வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கும் நடைமுறைகளில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் குற்றம் சுமத்தியுளளார்.

ராஜதந்திர பதவிகளை வகிக்காதவர்களுக்கு அதிகளவில் ராஜதந்திர ரீதியிலான கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைககளம் 2872 இராஜதந்திர கடவுச் சீட்டுக்களை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


அதிகளவில் இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக விமான நிலையத்தின் முக்கிய பிரபுக்களுக்கான விசேட பகுதியில் அதிகளவானவர்கள் சஞ்சரிப்பதனைக் காண முடிகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அதிகளவில் வர்த்தகர்களுக்கு ராஜதந்திர ரீதியான கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்கள், பலல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்றுக் கொண்டவர்கள், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட செயலாளர்கள், ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், ஊடகச் செயலாளர்கள், வங்கியாளர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலருக்கு இவ்வாறு இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதியின் பாரியார் பிள்ளைகள், பிரதமரின் குடும்பத்தார், அமைச்சர்களின் குடும்ப உறுப்பினர்கள், வெளிநாடுகளில் கடமையாற்றி வரும் இராஜதந்திரிகளின் குடும்ப உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் பிரதமர்கள், எதிர்க்கட்சித் தலைவர், மாகாண முதலமைச்சர்கள், சட்ட மா அதிபர், பிரதம நீதியரசர்.

உச்ச நீதிமன்ற நீதியரசர்கள், அமைச்சரவை அமைச்சர்களின் செயலாளர்கள், ஜனாதிபதியின் ஆலோசகர்கள், மத்திய வங்கியின் ஆளுனர், ஜனாதிபதியின் செயலாளர், படைகளின் தலைவர்கள், காவல்துறை மா அதிபர், பிரதிக் காவற்றுறை மா அதிபர்கள், கத்தோலிக்க பேராயர்கள், மல்வத்து, அஸ்கிரி, ராமன்ய, அமரபுர நிக்கயாயக்களின் பீடாதிபதிகள் உள்ளிட்ட மேலும் சிலருக்கே இவ்வாற இராஜதந்திர கடவுச் சீட்டு வழங்கப்படுவதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.





சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையினரால் வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திச் சபை உறுப்பினர் என பலரும் கலந்து கொண்டிருப்பதைக் காணலாம். (நி.ஜெனா)

## கலாசார திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி

# உரிய முறையில் பயன்படுத்தப்படவேண்டும்

### வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் கலாசார வளர்ச்சியில் கலைஞர்களின் ஊக்குவிப்பு பண்பாட்டு பேணுகை சார்ந்த வேலைத்திட்டங்களுக்கு அரசினால் நிதி ஒதுக்கப்படுகின்றது. அவை உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாணத்தினுடைய கலை பண்பாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பாக வடமாகாண கலைஞர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச கலைகளின் வளர்ச்சிக்கு அரசினால் ஒதுக்கப்படுகின்ற நிதி உரிய முறையில் சென்றடைய வேண்டும். இன்றைய சூழலில் அரசினால் கலாசார பிரிவுகளின் ஊடாக சிறந்த வேலைத்திட்டங்களை தற்போது ஆரம்பித்திருக்கின்றோம்.

பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் அவற்றினை உரிய முறையில் திட்டமிட்டு செயற்பாட்டு அறிக்கை விபரங்களை அனுப்பும் படி கூறியுள்ளோம்.

கலாசார உத்தியோகத்தர்களால் அனுப்பப்படுகின்ற தங்களுடைய பிரதேசம் சார்ந்த செயற்பாட்டு அறிக்கைகள் தற்போது எங்களிடம் வந்து கொண்டிருக்கின்றது. பிரதேச கலைவளர்ச்சி சார்ந்த நிதி எந்த நோக்கத்திற்காக அனுப்பப்படுகின்றதோ அந்நோகத்தினை நிறைவு செய்யும் நோக்கில் பயன்படுத்தப்பட வேண்டும். வேலைத்திட்டங்களுக்கான நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என மேற்பார்வை செய்ய உள்ளோம்.

உருவாக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு அரச நிதி பயன்படுத்தப்படுகின்ற போது சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

பிரதேச செயலகங்களின் ஊடாகவே கலைத்துறை செயற்பாடுகளுக்கான நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. இவ்வாறு ஒதுக்கப்படுகின்ற நிதி பிரதேச கலைஞர்களின் வளர்ச்சிக்கு உரிய முறையில் சென்றடைய வேண்டும் என்றார். (63)

## மின்னியலாளர் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் உள்ள யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தினால் வீட்டு மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 - 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இல, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் யூன் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீட்டு மின்னியலாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் எனத் தவறாது குறிப்பிட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முரசின் இன்றைய பலன்



[25.05.2014 ஞாயிற்றுக்கிழமை]

ஜய வருஷம் வைகாசி மாதம் 11ஆம் திகதி.
அமிர்தம் /துவாதசி.
ரேவதி நட்சத்திரம் பி.ப 05.34வரை. பின் அஸ்வினி.
இராகு காலம் 4.22 - 5.52வரை. சுபநேரம் 08.52 - 10.22வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வியாபார உத்தியை மாற்றியதனால் பொருட்களின் விற்பனையால் இலாபம் சேரல். கருத்தினை எடுத்துரைக்க மொழி தடையாக இருப்பதை எண்ணி விசனப்படல். |
| ரிஷபம் | பிழையை மன்னித்ததால் நட்புக்கு கரம் நீட்டி உறவுக்கு வழிவகுத்தல். மௌனம் காத்ததால் நாடி வந்த காரியம் வெற்றிக்கு பச்சைக்கொடி காட்டுதல். |
| மிதுனம் | ஊர்சுற்றித்திரியும் மக்களை கண்டிக்க வெளிக் கிட்ட பெற்றோருடன் ரகளை ஏற்படல். கணக்கில் தில்லுமுல்லுக்காணப்பட்டதனால் வாடிக்கையை நிறுத்த முற்படல |
| கடகம் | குளவி/மயிர்க்கொட்டித்தாக்குதல் பற்றி எச்சரிக்கையாக இருப்பதினால் கெடுதி விலகுதல். விளையாட்டு மற்றும் கலைநிகழ்வுகளால் பரிசும்/பாராட்டும் பெறுதல. |
| சிம்மம் | போலிநகையை அடகுவைக்க வருபவர் பற்றி எச்சரிக்கையாக இருத்தல் நன்மை பயக்கும. கௌரவப் பிரச்சினை மேலிட்டதால் அழைத்த நிகழ்ச்சியை புறக்கணித்தல |
| கன்னி | பழையகாலத்தில் ஏற்பட்ட கசப்பான அனுபவமொன்றினை மீட்டதால் துயர்தோன்றுதல். தகுதியும் திறமையும் இருந்து பணிகிடைக்காமையினால் வெளியூர் செல்ல ஆதங்கப்படல். |
| துலாம் | புதித்தாக மனை அமைக்க முற்படுகையில் அயலவருடன் தர்க்கம் ஏற்படல். கள்ளநாணயம் கைக்குவந்து சேர்ந்தால் மனத்துயரினை அடைதல். |
| விருச்சிகம் | பிழையை எடுத்துக்காட்டிய வேளை பிதாபிள்ளை உறவில் விரிசல் ஏற்படல். முன்னேற்றம் ஏற்பட வருகின்ற சந்தர்ப்பத்தை உடும்புப் பிடிபோல தக்க வைக்கவும். |
| தனுசு | குடும்பத்தவரை அனுசரித்து செல்வதினால் பிரச்சினைகள் ஏற்படாது விடல். அடுத்தவரை நம்பி பொறுப்பினை ஒப்படைக்காது நீங்களே செய்து முடிக்க முனவாருங்கள். |
| மகரம் | வாய்த்தர்க்கம் மோதலாகி காயமேற்பட்ட நிலையில் மருத்துவமனை செல்வர். நீண்டகால நிலுவை பெறமுடியாத நிலையில் காவல்துறை ஏகும் முயற்சியை மேற்கொள்ளல். |
| கும்பம் | நம்பகத்தன்மை அற்றுப்போனதால் நிலம்வாங்க பின்னடித்தல்.புதிய முயற்சியில் ஈடுபட தற்போதைய திசாபுத்திப்பலன் பார்க்க சோதிடரை நாடுதல். |
| மீனம் | அடகு வைத்த பொருட்கள் ஏலம் போவதை எண்ணி கவலை மிகக் கொள்ளல். விலங்கு குறுக்க கறுத்ததால் விபத்தினின்றும் மயிரிழையில் தப்புதல். |

# முகமாலை பிரதான வீதியில் மஞ்சள் கடவை இடுமாறு அறிவுறுத்து

(மன்னார்)

முகமாலைப் பகுதியில் மக்கள் மீள்குடியேறியதையடுத்து மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக முன்னர் பயன்படுத்திய கிராமத்துக்கான நிரந்தர வீதி மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்ட நிலையில் அவ்வீதியில் மஞ்சள் கடவை போடப்படாமையால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுவரை மாற்றுப்பாதை பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் இப்பிரதேசத்துக்கான நிரந்தர பாதையை திறந்து மக்கள் போகக்குவரத்தை இலகுபடுத்துமாறு துறைசார்ந்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் இவ்வீதி மக்கள் போக்குவரத்துக்கு திறந்து வைக்கப்பட்டது.

எனினும் இவ்வீதி திறக்கப்பட்டு 8 மாதங்கள் கழிந்துள்ள நிலையில் இதுவரை மஞ்சள் கடவை போடப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் எனப்பலர் சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே குறித்த வீதிக்கு மஞ்சள் கடவை போடுமாறும் போக்குவரத்தை இலகுபடுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (37)

# இலவச மருத்துவமுகாம்

(மானிப்பாய்)

இளவாலை வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இலவச சித்த மருத்துவ முகாம் இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இளவாலை வாலிபர் சங்கத்தினர் தெல்லிப்பளை சித்த வைத்தியசாலையிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே இவ் இலவச சித்த மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

இவ் வைத்திய முகாமில் வைத்திய அதிகாரி துஷ்யந்தி கலந்து கொள்ளவுள்ளார். எனவே இவ் மருத்துவமுகாமில் மக்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு இளவாலை வாலிபர் சங்கத்தினர் கேட்டுள்ளனர். (48)

# மகாகும்பாபிஷேகம்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் வண்ணை அருள்மிகு ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில் (பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவில்) புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் யூன் மாதம் 02 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.50 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு முதல் கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 31 ஆம் திகதி சனிக்கிழமையும் அடியார்களின் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இதில் உரும்பிராய் ஸ்ரீ பர்வத வர்த்தனி ஆலய பிரதமகுரு வேத சிவாகம ஞானபானு கிரியாசாகரம், பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்தி வைப்பார். அடியார்கள் கும்பாபிஷேகத்துக்கு தேவையான பால், இளநீர், பழம், உள்ளிட்ட நைவேத்திய பொருட்களை வழங்கலாம் என ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (10)

# கம்பீரின் குஷி

(கொல்கத்தா)

நாங்கள் அடுத்தடுத்து தொடர்ந்து 6 வெற்றிகளைப் பெற்றுள்ளோம். இது கடின உழைப்புக்கு கிடைத்த வெற்றியாகும் என கொல்கத்தா அணிக் கப்டன் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

தொடர் தோல்விகளிலிருந்து மீண்டும் வெற்றிப் பாதைக்குத் திரும்பியது மகிழ்ச்சி. இதை இப்படியே விட்டு விடாமல் தொடர்ந்து இதேபோல சிறப்பாக ஆட வேண்டியது முக்கியம். உண்மையான போட்டியே இனிமேல் தான் ஆரம்பமாகவுள்ளது.

மேலும் முதலில் மோதிய 7 போட்டிகளில் 2இல் மட்டுமே கொல்கத்தா வென்றிருந்தது. அடுத்து 4 போட்டிகளில் தொடர்ந்து தோற்றது. இதையடுத்து தற்போது 6 போட்டிகளில் அதிரடியாக வென்றுள்ளது.

இந்த வெற்றியால் எனக்கு இப்போது சற்று நிம்மதியாக உள்ளது. போதிய அளவுக்கு எங்களது திறமையை வெளிக் கொண்டு வந்து விட்டோம் என்று நினைக்கிறேன். இனிமேல் முழு வேகத்தில் நாங்கள் செயற்படுவோம். உத்தப்பாவின் எழுச்சியும் எங்கள் வெற்றிக்கு முக்கிய காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



நடப்பு ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் இன்று முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை பரிஸில் நடைபெறவுள்ளது. களிமண் தரையில் நடைபெறும் 113ஆவது போட்டித் தொடராக இது அமையவுள்ளது. இப்போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை நடப்பு சம்பியன்களான செரீனா வில்லியம்ஸ் மற்றும் நடால் ஆகியோர் அறிமுகம் செய்வதைக் காணலாம்.

## INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

**பஞ்சாப் எதிர் டில்லி**

**இடம்: சண்டிகர். நேரம்: மாலை 4 மணி**

**மும்பை எதிர் ராஜஸ்தான்**

**இடம்: மும்பை. நேரம் : இரவு 8. மணி**

# உலகக் கிண்ணத்துடன் ஓய்வு

(லாகூர்)

அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருடன் ஒரு நாள் போட்டியிலிருந்து விலகுவது குறித்து சிந்திப்பேன். இருப்பினும் ருவென்ரி-20 தொடரில் நாட்டுக்காகத் தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதே எனது இலக்கு என பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டி மூத்த வீரர்களுக்கு முக்கியமானதொரு தொடராகும். இப்போட்டியின் பின் நான் ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறலாம் என்றிருக்கிறேன், ஆனால் தொடர்ந்து ருவென்ரி-20 கிரிக்கெட்டில் விளையாடுவேன்.


நான் எப்போதுமே கூறி வருகிறேன், எனது உடல் தகுதி, ஆட்டம் ஆகியவற்றைப் பொறுத்தே என் கிரிக்கெட் என்று. 2015 உலகக் கோப்பைக் கிரிக்கெட்டில் எனது ஆட்டத்திறனைப் பார்த்த பின்னர் நான் முடிவெடுப்பேன்.

தலைமைத்துவம் என்பது ஒரு வீரருக்குக் கிடைக்கும் மரியாதை.

கடந்த காலத்தில் நடந்த கசப்பான அனுபவங்களை மறந்து விட்டேன், எனவே நான் கப்டனாக விருப்பப்படுகிறேன். கப்டன் பதவி எல்லா வீரர்களின் விருப்பமாகவும் உள்ளதுதான்.

அணியில் நீடித்திருப்பதாக நான் ஆடுவதில்லை, என்னிடம் உள்ள ஆட்டத்திறனை நாட்டுக்காக எப்பவுமே கொடுத்திருக்கிறேன்.

உலகிற்கு இந்தியா எதிர்மறையான செய்தியை அளித்துள்ளது. பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவில் சென்று விளையாட வேண்டும் என்பதே அனைவரது விருப்பமும். ஐ.பி.எல். தொடரில் எங்கள் அணி வீரர்களைப் புறக்கணித்திருப்பது கவலையளிக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





## கலங்கச் செய்த நட்சத்திரங்கள்

நட்சத்திர வீரர்களின் ஆட்டம் வெற்றிகரமாக அமையாதது என் இதயத்தை கலங்கச் செய்திருக்கின்றது என பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் உரிமையாளர் விஜய் மல்லையா தெரிவித்துள்ளார். ஐ.பி.எல் தொடரில் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றாக பெங்களூர் அணி விளங்குகிறது. இதில் இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான யுவராஜ், ஹோலி மட்டுமல்லாமல், கிறிஸ் கெய்ல், டிவில்லியர்ஸ், முரளிதரன், மைக்கல் ஸ்ரார்க் போன்ற உலகத் தரம் வாய்ந்த வீரர்களும் இடம்பிடித்துள்ளனர். இந்நிலையில் கொல்கத்தாவில் நடைபெற்ற வாழ்வா? சாவா? ஆட்டத்தில் பெங்களூர் ரொயல் சலஞ்சர்ஸ் அணி 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் தோல்வி கண்டு பிளேஓப் வாய்ப்பை இழந்து வெளியேறியது. நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய வலுவான அணியாக விளங்கியும் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் வெளியேறியது இரசிகர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே விஜய் மல்லையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஐ.பி.எல். போட்டியில் எங்கள் அணியின் மோசமான செயற்பாடுக்காக இரசிகர்களிடம் வருத்தம் தெரிவித்துக் கொள்கின்றேன். நட்சத்திர வீரர்களின் ஆட்டம் வெற்றிகரமாக அமையாதது இதயத்தை நொருக்குவதாக இருக்கிறது. நடந்தது நடந்து முடிந்துவிட்டது. இனி நடக்கப் போவதைப் பார்ப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

## கிண்ணம் வெல்லும் அணிக்கு 3.5 கோடி

உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் மாபெரும் பரிசுத் தொகை காத்திருக்கிறது. மொத்தப் பரிசுத் தொகை 576 மில்லியன் டொலராகும். இது கடந்த 2010 தொடரை விட 37 சதவீதம் கூடுதலாகும். குழுப்போட்டிகளுடன் விடைபெறும் 16 அணிகளுக்கு தலா 80 இலட்சம் டொலர் பரிசுத் தொகையாக கொடுக்கப்படவுள்ளது. சுற்று 16 வரை வந்து வெளியேறும் 8 அணிகளுக்கு தலா 90 இலட்சம் டொலரும், காலிறுதிப் போட்டிகள் வரை வந்து வெளியேறும் 4 அணிகளுக்கு தலா 1.4 கோடி டொலர் பரிசாகக் கிடைக்கும். 4ஆவது இடத்தைப் பிடிக்கும் அணிக்கு 2 கோடி டொலர் பரிசாகக் கிடைக்கும். 3ஆவது இடம் பிடிக்கும் அணிக்கு 2.2 கோடி டொலர் பரிசாகக் கிடைக்கும். கோப்பையை வெல்லும் அணிக்கு 3.5 கோடி டொலர் பரிசுத் தொகை கிடைக்கும். 2ஆவது இடம் பெறும் அணிக்கு 2.5 கோடி டொலர் பரிசாகக் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிய விளையாட்டு வடகொரியா பங்கேற்பு

(சியோல்)

ஆசிய விளையாட்டுப் போட்டியில் வடகொரியா கலந்து கொள்ளும் என அந்நாட்டு ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டி தென் கொரியாவின் துறை முக நகரமான இன்சியோனில் செப்ரெம்பர் 14ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் வடகொரியா பங்கேற்குமா? என்ற சந்தேகம் எழுந்தது. ஏனெனில் பகைமை கொண்டுள்ள இவ்விரு நாடுகள் இடையே எப்போதும் பதற்றமான சூழலே நிலவுகிறது. இந்த நிலையில் ஆசிய விளையாட்டில் வட கொரியா கலந்து கொள்ளும் என்று அந்த நாட்டு ஒலிம்பிக் சங்கம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

Brasil 2014 FIFA WORLD CUP

**கால்பந்து திருவிழா**

**இன்னும் 17 நாட்கள்**



ஸ்ரெவன் ஜெராட்

# உலக கால்பந்தாட்ட விழா

# வெல்லப்போகும் அணி எது?

எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்



## இங்கிலாந்து சிறு பார்வை

இங்கிலாந்து நாட்டின் மக்கள் தொகை 5 ½ கோடி. 19ஆம் நூற்றாண்டில் உலகின் பல பாகங்களிலும் கால்பந்தாட்டத்தை அறிமுகம் செய்த பெருமையும், கால் பந்தாட்ட சட்ட திட்டங்களை ஒழுங்கமைத்த பெருமையும் இங்கிலாந்துக்கே அதிகம் உரித்தானதாகும். ஆயினும் 1950ஆம் ஆண்டிலிருந்து உலகக் கிண்ணத்தில் பங்குபற்றி வருகிறது. ஆறு தடவைகள் காலிறுதி வரை முன்னேறியது.

1966இல் உலகக் கிண்ணப் போட்டிகள் இங்கிலாந்தில் நடாத்தப்பட்டபோது மட்டுமே கிண்ணத்தை வென்றுள்ளது. FIFA இன் சர்வதேச தர வரிசைப்படுத்தலில் 2012இல் இரண்டு தடவைகள் 3ஆம் இடத்தையும் 2013இல் இரண்டு தடவைகள் 4ஆம் இடத்தையும் பெற்றிருந்தது. தற்போது 11ஆம் இடத்திலுள்ளது.

2006, 2010 உலகக் கிண்ணத்தில் பங்குபற்றிய, 33 வயது மத்திய கள வீரர் ஸ்ரெவன் ஜெராட் (Steven Gerrard) அணிக்குத் தலைமை தாங்குகிறார். தனது 17ஆவது வயதிலேயே தேசிய அணியில் இடம் பெற்று, மிகக் குறைந்த வயதில் அதிக கோல்கள் போட்டு பெயர் பெற்றதுடன் 2006, 2010 உலகக் கிண்ணத்தில் பங்குபற்றிய, 28 வயது வேய்ன் றூனி (Wayne Rooney) இங்கிலாந்தின் நம்பிக்கை நட்சத்திரமாவார். 20 வயது மத்திய கள வீரர் றொஸ் பாக்லி (Ross barkley) யும் குறிப்பிடத்தக்கவராவார். மிகவும் அனுபவம் வாய்ந்த, 66 வயது றோய் ஹொட்சன் (Roy Hodgson) அணியின் பயிற்சியாளராவார். இவரது அணி அமைப்பு 4 - 4 - 2 ஆகும்.





கிளிநொச்சி திருவையாறு மகிழகம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 1.00 மணிக்கு முன்பள்ளி முன்றலில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான விளையாட்டு நிகழ்வுகள் பல நடைபெற்றன. குறிப்பாக, வினோத உடை நிகழ்வு விருந்தினர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது. போட்டியில் பங்குபற்றிய அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது. முன்பள்ளி இயக்குநர் தங்கராஜா ஜெயந்திரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொண்டார். விருந்தினர்கள் வரவேற்கப்படுதையும் வினோத உடை தரித்த சிறுவனையும் பரிசில் வழங்குவதையும் காணலாம். (90)

விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)


ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் மூன்று ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன. இதில் முதல் போட்டியில் யாழ். பற்றீசியன் அணியும் யங்ஸ்ரார் அணியும் மோதவுள்ள அதே வேளை, இரண்டாவது போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. மற்றும் ஸ்கந்தா ஸ்ரார் அணியும் மோதவுள்ளது. இறுதியாக நடைபெறவுள்ள போட்டியில் சென்றலைட்ஸ் அணியும், யாழ். ஜொனியன்ஸ் அணியும் மோதவுள்ளன.

## தொடரை வெல்வோம்

மழை காரணமாகவே முதல் போட்டியில் தோல்வியைத் தழுவ நேரிட்டது. அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாக ஆடி தொடரை வெல்வோம் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி சவால் நிறைந்த அணி என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இருப்பினும் எங்கள் அணியிலும் தலைசிறந்த வீரர்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது. எனவே, நாங்கள் ஓர் அணியாக எமது திறன்களை வெளிப்படுத்தி தொடரைக் கைப்பற்றிக்கொள்ள முயற்சிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இளவாலை இளம்சுடர் சம்பியன்

(பன்னாலை)

தெல்லிப்பளை பிரதேச செயலக பதிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் வெற்றிக் கிண்ணத்தை இளவாலை இளம்சுடர் விளையாட்டுக்கழகம் கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டி கடந்த வாரம் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் மற்றும் தடகளப் போட்டிகள் நடைபெற்றன.

கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் பன்னாலை கணேசன் அணியும் இளவாலை சென். லூட்ஸ் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பன்னாலை கணேசன் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து தடகளப் போட்டிகள் நடைபெற்றன.

ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் இளவாலை இளம்சுடர் விளையாட்டுக்கழகம் 47 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் பன்னாலை கணேசன் விளையாட்டுக்கழகம் 37 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.


தெல்லிப்பளை பிரதேச செயலர் ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

இப்போட்டி நிகழ்வில் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர்கள், வீர,வீராங்கனைகள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டுகளித்தனர். (93)



யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட பிரதேச இளைஞர் கழக பெண்கள் அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்ட தெல்லிப்பளை பிரதேச இளைஞர் கழக அணியைக் காணலாம். கடந்த வாரம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண பிரதேச இளைஞர் கழக அணியை 36-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு தெல்லிப்பளைப் பிரதேச இளைஞர் கழகம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

# கிண்ணம் வென்றது குருநகர் கார்மேல் போய்ஸ்



(நல்லூர்)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை குருநகர் கார்மேல்போய்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

40 இற்கும் மேற்பட்ட வடமாகாண அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வாரம் அரியாலை ஸ்ரான்லி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பொற்பதி இந்து அணியும் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பொற்பதி இந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜன் 19, தேசிகன் 6, செல்டன் 3 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 34 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பொற்பதி இந்து அணி 4.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் நுக்மன் 11, கோபி 5 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் செல்டன் இரண்டு, அஜன், அலன், ரொக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இதன் மூலம் கார்மேல் போய்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக குருநகர் கார்மேல்போய்ஸ் அணியின் செல்டன், தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியின் அஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (48)

# வடமாகாண சபையின் செயற்ப
# பகிரங்க விவாதத்துக்கு வரும



கௌரவ சபாநாயகர் அவர்களே!... இருபது வருடங்களுக்கு மேலாக பலத்த சவால்களுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக எனக்கு அரசியல் அங்கீகாரத்தை வழங்கி வருகின்ற தமிழ் பேசும் மக்களின் சார்பாகவும்,...
எமது மக்களின் நீடித்த துயர்களைப் போக்குவதற்காக நான் அங்கம் வகித்து வருகின்ற அரசாங்கத்தின் அமைச்சர் என்ற ரீதியிலும்,....

இந்தச் சபையில் நான் சில நியாயங்களை எடுத்துரைக்க விரும்புகின்றேன். நாம் வெறுமனே அரசியல் உரிமைக்காக மட்டும் குரல் கொடுத்து உழைத்து வருபவர்கள் அல்ல.

அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை உருவாக்கவும் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கவுமே நாம் அன்றிலிருந்து குரல் கொடுத்து வருபவர்கள். அத்தோடு மனித குலத்தை, மக்கள் சமூகத்தை சீரழிக்கும் எந்த செயல்களையும் நாம் ஒரு போதும் ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல.

## போதை வியாபாரமாக அரசியல் செய்பவர்கள்

மனித சமூகத்தையே சீரழிக்கும் போதைவஸ்து பாவனையை நாம் கொள்கை ரீதியாகவும் நடைமுறைரீதியாகவும் எமது ஆரம்பகால உரிமைப் போராட்ட காலத்தில் இருந்தே எதிர்த்து வந்திருக்கின்றோம்.

நான் எமது மக்களின் சார்பாக அங்கம் வகித்து வரும் அரசாங்கம் போதைவஸ்து பாவனைக்கோ அல்லது அதன் விற்பனைக்கோ ஒரு போதும் துணை போகாது என்பது எனது நம்பிக்கை.

இங்கு விசித்திரமான விடயம் என்னவென்றால், போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்ட சிலரை உறுப்பினர்களாகக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, போதைவஸ்து வியாபாரத்தில் இருந்து கிடைக்கும் வெளிநாட்டு பணத்தில் சுயலாப அரசியல் நடத்திக்கொண்டு இன்று இந்த நாடாளுமன்றத்தில் போதைவஸ்தை எதிர்ப்பது போல் நாடகம் ஒன்றை அரங்கேற்றி வருகிறது.

தமிழ் பேசும் மக்களின் பெயரால் அரசியல் நடத்த வந்தவர்கள் சமூகத்தைச் சீரழிக்கும் வியாபாரங்களை நடாத்துவதால்தான் அரசியல் தீர்விற்கான வாய்ப்புகள் கிடைத்தும் எமது பிரச்சினை தீர்வின்றி இழுபட்டுச் செல்கிறது.

உலகெங்கும் நடந்து முடிந்த உரிமைப் போராட்டங்கள் யாவும் விடுதலை வெற்றியை பெற்றிருக்கின்றன.

அல்லது அரசியல் தீர்வின் திசை நோக்கிச் சென்று எதிர்பார்த்த உரிமைகளின் வெற்றியை பெற்றுக்கொடுத்திருக்கின்றன.

ஆனாலும், இலங்கைத் தீவில் வாழுகின்ற தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் மட்டும்,

இன்று வரை அரசியல் தீர்விற்கான அரிய பல வாய்ப்புகள் கிடைத்திருந்தும், தீர்வின்றி இழுபட்டுச் செல்லும் துயரங்களே இங்கு தொடர்கின்றன.

எமது உரிமைப்போராட்ட வரலாற்றிலும் உரிமையின் பெயரால் நடாத்தி முடிக்கப்பட்ட அழிவு யுத்தத்திலும்,.. விலை மதிக்க முடியாத மனித உயிர்களை நாம் இழந்திருக்கின்றோம்.

பல்வேறு இடப்பெயர்வுகளையும் சொத்திழப்புக்ளையும் சொந்த நிலங்களை பிரிந்து வாழும் அவலங்களையும் நாம் கண்டிருக்கின்றோம்.

ஆனாலும், அனைத்து அவலங்களுக்கும் உயிரிழப்புகளுக்கும் காரணமாக இருந்த அர்த்தமற்ற அழிவு யுத்தத்தை நிரந்தரமாகவே முடிவிற்குக் கொண்டு வந்து,...

அமைதி தரும் சூழலை உருவாக்கி, அந்த அமைதிச் சூழலில் இருந்து அரசியல் தீர்வு நோக்கிச் செல்லும் பாதை இங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

## தமது தலைவர்களுக்கே அஞ்சலி செலுத்தாதவர்கள் மக்களுக்குச் செய்வது நடிப்பு!

இதேவேளை,.. 2009 ஆம் ஆண்டு அழிவு யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், இந்தச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக உரையாற்றியிருந்த அதன் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள்,

அழிவு யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு நன்றி கூறி உரையாற்றியிருந்ததையும் நான் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இந்தச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இறந்து போன மக்களுக்கு அஞ்சலி செலுத்த உரிமை இல்லை என்று நீலிக் கண்ணீர் வடித்திருக்கிறார்கள்.

இதுவரை கால அழிவு யுத்தத்தின் போது பலியாகிப்போன எமது மக்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி மரியாதை என்பது இன்னமும் அந்த இழப்பின் துயரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வையும் நீடித்த மகிழ்ச்சியையும் உருவாக்கி கொடுப்பதேயாகும்.

அதற்காகவே பிறந்திருக்கும் இந்த அமைதிச் சூழலை எமது மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்காகப் பயன்படுத்த எண்ணி நாம் நடைமுறை யதார்த்த வழி நின்று உறுதியுடன் உழைத்து வருகின்றோம்.

ஆனாலும், அழிவு யுத்தம் முடிவிற்குக் கொண்டுவந்திருப்பதை ஆதரிப்பதாகக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,

மறு புறத்தில் பலியாகிப்போன எமது மக்களின் விலைமதிப்பற்ற உயிர்களுக்கு மாற்றீடாக ஓர் அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதில் விருப்பமின்றி இருந்து வருகிறது.

இறந்து போன எமது மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையாகவே அஞ்சலி மரியாதை செலுத்த விரும்பியிருந்தால்,

எமது மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக்கொடுக்க அவர்கள் முன் வந்திருப்பார்கள்.

மீண்டுமொரு பொன்னான வாய்ப்பாக பிறந்திருக்கும் இந்த அமைதிச் சூழலை அரசியல் தீர்வுக்காக அவர்கள் பயன்படுத்த முன்வந்திருப்பார்கள்.

ஆனாலும் அவர்கள் முன்வரவில்லை.... ஏன் முன்வரவில்லை?... இது ஆச்சரியமான ஒன்றல்ல,... தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பங்கள் யாவும் அப்பாவி மக்களின் அழிவுகளும் அவலங்களுமே.

போதை வஸ்து பாவனை கூட இங்கு இருக்க வேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகின்றது.

ஏனெனில் கலாசார சீரழிவுகள் நடப்பதாகக் காரணம் காட்டி, அதில் கூட தமது சுயலாப அரசியலை நடாத்திடவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கங்கணம் கட்டி நிற்கிறது.

எங்கே ஒரு அவலம் நடக்கின்றதோ,... எங்கே ஒரு மனித உயிர் பலியாக்கப்படுகின்றதோ,... எங்கே கலாசார சீரழிவுகள் நடப்பதாக கதைகள் கட்டி விடப்படுகின்றனவோ,.

அங்கே அதை வைத்து அழுவது போல் நடித்து, நீலிக்கண்ணீர் வடித்து,... அந்த அவலங்களையும் இழப்புகளையும் கலாசார சீரழிவுகளையும் அரசியலாக்கி அதை அடுத்த தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்துவதே அவர்களது வரலாறு.

சவப்பெட்டிக்கடைக்காரன் கூட சாவு நடக்கும் போது துயரப்படுவான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ மனித உயிர்கள் பலியாகிப் போனால் அதில் மகிழ்ச்சி கொண்டாடுகிறார்கள்.

இறந்து போன மக்களுக்கு அவர்கள் அஞ்சலி செலுத்துவது உண்மை என்றால்,....

எமது மக்களை நேசித்த தமது தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், ஆலாலசுந்தரம், தர்மலிங்கம், சறோஜினிதேவி யோகேஸ்வரன், பொன் மதிமுகராஜா, பொன் சிவபாலன், தோழர் பத்மநாபா, சிறி சபாரத்தினம் போன்றவர்களுக்கும் அஞ்சலி செலுத்த முன் வந்திருப்பார்கள்.

தமது தலைவர்களுக்கே உரிய முறையில் அஞ்சலி செலுத்த முடியாதவர்கள், அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்துவது போல் நடிப்பது வெறும் பகல் வேசம்.

இறந்து போன மக்களை மனதில் நிறுத்தி அஞ்சலி செலுத்தாமல் அடுத்த தேர்தல் வெற்றியை மனதில் வைத்துக்கொண்டே இவர்கள் இந்த அஞ்சலி நாடகங்களை அரங்கேற்றி வருகிறார்கள்.

## மக்களை அழியக்கொடுத்து விட்டு குடும்பங்களோடு வெளிநாட்டில்...

போதை வஸ்து பாவனை நடப்பதாகவும், அதனால் சமூகம் சீரழிந்து போவதாகவும் கூறுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமது சுயலாப அரசியலால்தான் அப்பாவி மக்கள் செத்தழிந்து போனார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?....

முள்ளிவாய்க்கால் அழிவுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசி வருவது வெறும் பொய் வேசம்.

வன்னி மண்ணில் யுத்தம் நடப்பதற்கு முன்பாக நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்து,.

யுத்தம் தொடங்கினால் அழிவுகள் நடக்கப்போகின்றன,

# சயற்பாடுகளுக்கு மத்திய அரசு தடையாக உள்ளதா?

# வருமாறு அமைச்சர் டக்ளஸ் கூட்டமைப்புக்கு அழைப்பு

**21 - 05 - 2014 அன்று நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த வாக்கெடுப்பில் பங்குகொண்டு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆற்றிய உரை**

அவலங்கள் தொடரப்போகின்றன, அதை தடுப்பதற்கு வழியுண்டு வாருங்கள்,

இணைந்து செயற்படுவோம், எமது மக்களைக் காப்போம், என்று கேட்டிருந்தேன்.

ஆனாலும், தமிழ் பேசும் மக்கள் மீது எள்ளளவு இரக்கம் கூட காட்டாமல் எனது கோரிக்கையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தட்டிக்கழித்திருந்தார்கள்.

அதன் பின்னர், வன்னியில் அழிவு யுத்தம் தொடங்கிய போது எமது மக்களை அழிவுகளில் இருந்து பாது காக்க, அவர்களை யுத்தம் இல்லாத பிரதேசங்களுக்கு வருமாறு நாம் கேட்டிருந்தோம்.

அப்பாவி மக்களை யுத்த கேடயங்களாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும்,...

யுத்த பிரதேசங்களை விட்டு அப்பாவி மக்கள் வெளியேறி வர அனுமதிக்கப்பட வேண்டும் என்றும்,...

கோரிக்கைகளை முன்வைத்து மக்களை அணி திரட்டி நாம் மாபெரும் ஆர்ப்பாட்டங்களையே நடத்தியிருந்தோம்.

அப்போதும் 22 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற நாற்காலிகளை சூடேற்றி விட்டு,

எமது மக்களை தமது போதை வார்த்தைகளால் அழியக்கொடுத்து விட்டு, தமது குடும்பங்களோடு, உறவுகளோடு தாம் மட்டும் தப்பிச்சென்று உலக நாடுகளில் உல்லாசம் நடத்திக்கொண்டிருந்தனர்.

எந்தவொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினராவது யுத்தமற்ற பிரதேசத்தை நோக்கி எமது மக்கள் வருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று குரல் கொடுத்திருக்கவில்லை.

அன்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான வினோநோகராதலிங்கம் அவர்கள் லண்டனில் வைத்து கருத்து தெரிவித்திருந்த போது,...

தான் மட்டும் இது குறித்து குரல் கொடுத்திருந்ததாகவும், ஏனைய 21 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாய் மூடி அழிவுகளைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்ததாகவும் கூறியிருந்ததை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

பலியாகிப்போன நம் உறவுகளுக்கு அஞ்சலி நடத்துவது தவறல்ல. அதை யாரும் தடுக்க முடியாது.

ஆனாலும், பலியாகிப் போன எமது மக்களின் ஆத்மாக்களின் மீது ஏறி நின்று போதை ஏற்றும் சுயலாப அரசியல் நடத்துகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

## கிடைத்த மாகாண சபையை நடத்த விரும்பாதவர்கள் வெளிநாட்டு கதைவிடுகிறார்கள்

மீன் மணக்கும், மீன் விற்ற பணம் மணக்காது என்பார்கள்.

மனித குலத்தையே சீரழிக்கும் வகையில் நடத்தப்படும் போதை வஸ்து தொழில் மூலம் கிடைக்கும் வெளிநாட்டு பணத்தில் தமது உல்லாச பயணங்களையும், சுயலாப அரசியலையும் நடத்தி வருகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போதை வஸ்து பாவனைக்கு எதிராக பேசுகின்றார்கள்.

சாராயக்கடை முதலாளிகளாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சமூகம் சீரழிகின்றது என்று ஓலமிடுகின்றார்கள்.

நடந்து முடிந்த வட மாகாணசபை தேர்தலின் போது கிராமங்கள் தோறும் இளைஞர்களுக்கு மதுபானம் வழங்கி, இளைஞர்களை சீரழித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது வாக்கு வேட்டைகளை நடத்தியதை எத்தனையோ பெற்றோர்கள் என்னிடம் வந்து முறையிட்டிருக்கிறார்கள்.

இவர்கள்தான் இன்று போதை வஸ்து பாவனையால் கலாசாரம் சீரழிகிறது எனப்பேசி வருகிறார்கள்

நீ நீயாகவே திருந்திவிட்டால், சமூகம் தானாகவே திருந்தும் என்பார்கள்.

மக்களை வழி நடத்தி செல்வதாகக் கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் ஒழுக்க சீலர்களாக தாமே நடந்து காட்ட முன்வர வேண்டும்.

போதை வார்த்தைகளால் சர்வதேசத்தை காட்டி தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை அபகரித்து வருகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

மீட்பர்களாக நோர்வே வரும் என்றார்கள். அமெரிக்கா வரும் என்றார்கள். ஐரோப்பிய யூனியன் வரும் என்றார்கள், கனடா வரும் என்றார்கள்,

நடந்து முடிந்த ஜெனிவா மாநாட்டை அடுத்து எல்லோ ருமே ஏமாற்றி விட்டதாக நீலிக்கண்ணீர் வடித்தார்கள்.

அயலக நட்பு நாடாகிய இந்தியா கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுயலாப அரசியலை புரிந்து கொண்டு தனது அதிருப்தியை காட்டத் தொடங்கியிருக்கிறது.

கையிலே நெய்யை வைத்துக்கொண்டு வெண்ணைக்கு அலைவது போல், கிடைத்திருக்கும் மாகாணசபையை சரிவர நடத்த விரும்பாதவர்கள் இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதத் தொடங்கியிருக்கிறார்கள்.

இன்று, தென்னாபிரிக்காவை அழைக்கப்போவதாகக் கதை விடுகின்றார்கள்.

தென்னாபிரிக்காவே!.... தமிழ் பேசும் மக்களை மன்னித்துக்கொள் என்று நாங்கள் தென்னாபிரிக்காவிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டியுள்ளது.

ஏனென்றால், தென்னாபிரிக்கா மீதும், அதன் சுதந்திர தலைவரான கறுப்பு சூரியன் நெல்சன் மண்டேலா மீதும் தமிழ் பேசும் மக்கள் அளவு கடந்த மரியாதை வைத்திருக்கிறார்கள்.

சிறியது பெரியது என்று பேதம் பாராமல், அனைத்து கட்சிகளும், இணைந்து அனைத்து இன மக்களுக்குமான தீர்வை உருவாக்கி தலை நிமிர்ந்து நிற்கும் தேசம் தென்னாபிரிக்கா.

உரிமை கிடைக்க வேண்டும் என்றால் எதிரியுடனும் பேசு! என்றார் தலைவர் நெல்சன் மண்டேலா.

இதே வழிமுறையைத்தான் இலங்கை விவகாரத்திலும் தென்னாபிரிக்கா கையாள விரும்பும்.

தமது சொந்த சலுகைகளுக்காக மட்டும் பின் கதவு தட்டி அரசுடன் கூனிக்குறுகி பேசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விளம்பரத்திற்காக வெளியே மட்டும் வீரம் பேசிக் கொண்டு, அதே அரசுடன் பகைமை கொப்பளிக்க பேசி வருகிறது.

இந்தச் சபையில் போதை வஸ்துக்கு எதிராக பேச வந்திருக்கும் இவர்கள்,

போதைவஸ்தை விடவும். மோசமான போதை வார்த்தைகளோடு வந்திருக்கிறார்கள்.

போதைவஸ்தை விடவும், போதை வார்த்தைகள்தான் அதி மோசமானவை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கே வெளிச்சம்.

## 'உரிமை கிடைக்க எதிரியுடனும் பேசு' என்பதே தென்னாபிரிக்க சிந்தனை...

போதை ஏற்றும் வார்த்தைகளை உணர்ச்சி பொங்கப் பேசி வாக்குறுதிகளை போதைப்பொருளாக அள்ளி வழங்கி,

தமிழ் பேசும் மக்களை தொடர்ந்தும் தமது வெற்று வீர மயக்கத்தில் வைத்திருக்கலாம் என்று கனவு காண்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

உரிமை கிடைக்க வேண்டும் என்றால் எதிரியுடனும் பேசு! என்று மதிநுட்ப சிந்தனை வகுத்த தென்னாபிரிக்க நாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிவேச தெருக்கூத்துக்களை ஒரு பேதும் விரும்பாது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு வந்தால் தாம் மட்டும் தனியாக பேச வேண்டும் என்ற தமது ஏகப்பிரதிநிதித்துவ கூச்சல் ஓய்ந்துவிடும் என்றும், பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்றும் அச்சப்படுகின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அனைத்து தரப்பையும் உள்ளடக்கிய பேச்சுவார்த்தை மூலம் அரசியல் ஜனநாயக பன்முக சிந்தனையை வளர்த்தி ருக்கும் நாகரிக நாடான தென்னாபிரிக்கா,

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அநாகரிக அரசியலை ஒரு போதும் ஏற்காது.

ஆகவே, ஏனைய சர்வதேச நாடுகளைத் துணைக்கு அழைத்து பின்னர் அதே நாடுகள் தம்மை ஏமாற்றி விட்டதாக மக்களுக்கு கூறி,...

சர்வதேச நாடுகள் மீதான நம்பிக்கையை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தாமே வளர்த்து விட்டு, பின்னர் அதையே எமது மக்களின் மனங்களில் வெறுப்புணர்வுகளா்க மாற்றி விட்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

இன்று தென்னாபிரிக்காவை துணைக்கு அழைப்பவர்கள், தமது சுயலாப நாடகங்கள் அரங்கேற முடியவில்லை என்றதும், நாளை தென்னாபிரிக்காவும் ஏமாற்றி விட்டது என்று கூறி எமது மக்கள் மனங்களில் தென்னாபிரிக்கா குறித்த வெறுப்புணர்வுகளை வளர்க்கவே திட்டமிடுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஆகவேதான் தமிழ் பேசும் மக்கள் சார்பாக நான் தென்னாபிரிக்காவே எங்களை மன்னித்து விடு என்று முன்கூட்டியே வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்.

ஆனாலும், இந்த சபையின் ஊடாக ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவது போல் தென்னாபிரிக்கா எமது அரசியலுரிமை தீர்வு விடயத்தில் தலையிட முன்வந்தால் அதை நான் வரவேற்கத் தயாராகவே இருக்கின்றேன்.

இதேவேளை அதற்கான கால அவகாசத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் சகல அரசியல் அதிகாரங்களும் இருக்கின்றன.

வடக்கு கிழக்கில் ஈ.பி.டி.பியினராகிய எம்மிடம் இருக்கும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களை விட, ஏனைய 14 நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் யாழ் மாவட்டத்தில் எம்மிடம் இருக்கும் 4 உள்ளூராட்சி சபைகளை விட,

ஏனைய அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருக்கிறார்கள்.

அதை விட, எமக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பான வட மாகாண சபை அதிகாரத்தை அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் வைத்திருக்கிறார்கள்.

இத்தனை அதிகாரங்களையும் வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் பேசும் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று கூறி முழுப்பூசணிக்காயை சோற்றில் புதைக்க முயற்சிக்கிறது.

மாகாணசபையை தாம் நடத்துவதற்கு மத்திய அரசும் ஆளுநரும் தடையாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொய்யுரைத்து வருகிறது.

உண்மையாகவே மாகாண சபையை செயற்படுத்து வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பமின்றி இருக்கின்றதா?.....

அல்லது மத்திய அரசு மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு தடையாக இருக்கின்றதா?...

இந்த கேள்விகளுக்கான விடையினை தமிழ் பேசும் மக்கள் மேலும் முழுமையாக அறிந்து கொள்வதற்காக, எது உண்மை எது பொய் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காக நான் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளின் முன்பாகவும், வட மாகாண ஆளுநரின் முன்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பகிரங்க விவாதம் நடத்த விரும்பி அவர்களை அழைக்கின்றேன்.

# முடிவின்றித் தொடரும் இழுபறி தரம் குன்றும் சுகாதார சேவை

## உள்ளிருந்து ஒரு பார்வை

இலங்கையிலே பொதுச் சுகாதார சேவைகளுக்கு இலக்கணமாக விளங்கும் வடமாகாணத்திலே இச்சேவையினை உன்னதமான நிலைக்கு இட்டுச்சென்ற பெருமை வடமாகாண பொதுச்சுகாதாரத் துறையினரேயே சாரும். இவ்வாறாக தலைசிறந்த சேவையாக விளங்கிய வடமாகாண பொதுச் சுகாதாரத்துறை செயலிழந்து நிற்பது குறித்து வடமாகாாண சுகாதாரத் திணைக்களம் மிகவும் மன வேதனையுறுகிறது.

யாழ். மாவட்டத்தில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரிக்கும் அதே பிரிவைச்சேர்ந்த (வலி . தென்மேற்கு) பிரதேச சபை பொதுச் சுகாதார பரிசோதகருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக கடந்த இரண்டு மாத காலத்திற்கும் மேலாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருவதால் பாதிப்புற்றிருக்கும் வடமாகாண ஏற்படவில்லை.

இந்நிலையில் புதிதாக கடமையேற்ற வடமாகாண சுகாதார அமைச்சர் தலைமையில் வலி.வடக்கு(மல்லாகம்), நல்லூர், வலி.தென்மேற்கு(மானிப்பாய்) பிரதேச சபை தவிசாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நான், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிராந்திய பணிப்பாளர்கள் கலந்து கொண்ட 19.02.2014 ஆம் திகதிய கூட்டம் ஒன்றில் பின்வரும் முடிவுகள் எட்டப்பட்டன.

1. இப் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் நிர்வாக ரீதியாக பிரதேசசபைகளின் கீழ் பணியாற்றினாலும் தொழில்நுட்ப ரீதியாக சுகாதார வைத்திய அதிகாரிகளினால் மேற்பார்வை செய்யப்படவேண்டும்.

2. பிராந்திய சுகாதார சேவைகள் பரிசோதகர்கள். இம் மூன்று தரப்பின ரின் பொது இணக்கப்பாட்டுடனேயே இவ் விடயத்தை சுமுகமாகத் தீர்க்கலாம். இவ் விடயம் சம்பந்தமாக சுகாதார அமைச்சர் தலைமையில் பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

வைத்திய அதிகாரிகள் சங்க பிரதிநிதிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் தாய் சங்க, மாகாண சங்கப் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றத் தவிசாளர் கள் அனைவருடனும் கலந்து ரையாடல்கள் இடம்பெற்றன. பெரும்பாலான கலந்தரையாடல் களில் ஒரு தரப்பு ஏற்றுக்கொள்ளும் முடிவை மற்றத் தரப்பு ஏற்றுக் கொள்ளாததனால் அவை தோல் வியிலேயே முடிவடைந்தன. இப் பிரச்சினை தீரவேண்டுமாயின் மூன்று தரப்பும் பொது மக்களின் நலன்



கான ஆளணி அங்கீகரிக்கப்பட்டால் இவர்கள் நிரந்தரமாக பிரதேச சபைக்கு விடுவிக்கப்படுவார்கள்.

7. அவ்வாறு இவர்களுக்கான ஆளணிகள் 31.12.2014ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்படாத பட்சத்தில் இவர்கள் 01.01.2015ஆம் திகதி தொடக்கம் முழுமையாக சுகாதாரத் திணைக்களத்துள் உள்வாங்கப்படுவர்.

இவ் இணக்கப்பாட்டிற்கு பிரதேச சபைத் தவிசாளர்கள் நிரந்தரமாக தமக்கு இணைக்கப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டிலிருந்து விட்டுக்கொடுத்து இணங்கியுள்ளனர். அதே போல் சுகாதார வைத்திய அதிகாரிகளும் முழுமையாக தம்முடன் வேலை செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து விட்டுக்கொடுத்து இணங்கியுள்ளனர். இவ் இணக்கப்பாட்டிற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்களும் விட்டுக்கொடுத்து இணங்க

பொதுச் சுகாதார சேவைகள் சம்பந்தமாக நாம் மிகுந்த கவலையடைந்திருக்கிறோம். இதனால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுக்க இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினரை ஓர் பொது இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்து ஓர் சுமுகமான முடிவை எடுக்க முயற்சி எடுத்து வருகிறோம். இதன் பின்னணியில் இவ்விடயத்தில் பொதுச் சுகாதார பரிசோதர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்து இவ்விடயத்தின் பின்னணியையும் நாம் அடைய எதிர்பார்க்கும் பொது இணக்கப்பாட்டை விளக்கியும் இவ்வறிக்கை வெளியிடப்படுகிறது.

யாழ். . மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டு வலி.வடக்கு(மல்லாகம்), நல்லூர், வலி.தென்மேற்கு (மானிப்பாய்) ஆகிய பிரதேச சபைகளுக்கு சுகாதார திணைக்களத்திலிருந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இவர்கள் அங்கு பணியாற்றிய காலம் முதல் இவர்களது கடமை ஒழுங்குகள் பற்றிய பல முரண்பாடுகள் எழுந்தன. இவை பற்றி சுகாதார வைத்திய அதிகாரிகளால் மாவட்ட மட்ட நிறுவனத் தலைவர்களின் கூட்டங்களிலும், பொதுச் சுகாதார கலந்துரையாடல்களிலும் எடுத்துக்கூறப்பட்டதுடன், எழுத்து மூலமும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் அறிவிக்கப்பட்டன. அத்துடன் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிபபாளரால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் பின்னர் எனக்கும் அறிவிக்கப்பட்டது. பின்னர் என்னால் இவ்விடயம் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவர் மாகாண உளளூராட்சி ஆணையாளர் ஊடாக சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளுக்கு இவ்விடயம் சம பந்தமாக அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். ஆயினும் இம் முரண்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும்

பணிப்பாளரின் மாதாந்த கலந்துரையாடலில் பங்குபற்ற வேண்டும்.

3. ஒரு பொதுச் சுகாதார பரிசோதகருக்குரிய அனைத்துக் கடமைகளையும் தமது பிரிவில் நிறைவேற்றவேண்டும்.

4. ஏனைய பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பிரிவுகளில் தலையிடக கூடாது.

5. அத்தோடு இந் நடைமுறைகளுக்கு அமைவாக இவர்கள் மேலும் ஆறு மாதகாலம் பிரதேச சபைகளின் கீழ் பணியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். அக்காலப்பகுதிக்குள் இந் நடைமுறையை திருப்தியாக பின்பற்றினால் அவர்கள் தொடர்ந்து பிரதேச சபைகளின்கீழ் பணியாற்ற அனுமதிக்கப்படுவார். அக் காலப்பகுதியில் இந்நடைமுறையை திருப்தியாக பின்பற்ற தவறினால் மீள சுகாதாரத் திணைக்களத்தில் இணைக்கப்படுவர்.

இந்நிலையில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரிகீகும் அதே பிரிவைச் சேர்ந்த (வலி.தென்மேற்கு) பிரதேச சபை பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால் இப்பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்தது. மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மீறியமையாலும் குறித்த பிரதேசசபைகளில் பொதுச் சுகாதார பரிசோதகருக்கான ஆளணி இன்மையாலும் அந்த மூன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களையும் மீள சுகாதாரத் திணைக்களத்தில் இணைக்கவேண்டி ஏற்பட்டது.

இதன்பின்னர் இதனை ஆட்சேபித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயத்தை ஓர் சுமுகமான முடிவுக்கு கொண்டுவர பல கூட்டங்கள், கலந்துரையாடல்கள் நடை பெற்றன. இவ்விடயத்தில் மூன்று தரப்பினர் பங்காளிகளாக உள்ளனர். பிரதேச சபை தவிசாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார

கருதி தமது நிலைப்பாடுகளில் விட்டுக்கொடுப்பை மேற்கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் வட மாகாண சபையின் பேரவைத் தலைவர் .சி.வி.கே.சிவஞானம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற தலைவர்களையும், வைத்திய அதிகாரிகள் சங்க பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடி இருதரப்பினரதும் விட்டுக்கொடுப்புடன் ஓர் பொது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர். அப்போது இணக்கப்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் வருமாறு.

1. மேற்குறிப்பிடப்பட்ட மூன்று பிரதேச சபைகளிலும் தற்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு ஆளணி அங்கீகாரம் இல்லாமையால் இம் மூன்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பணியாற்றுவர்.

2. இவர்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் பிரதேச சபைகளின் வெளிக்களப்பணிகளிலும் செவ்வாய், வியாழன், சனி ஆகிய $2\frac{1}{2}$ நாட்களும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வெளிக்கள வேலைகளிலும் ஈடுபடுவர்.

3. இவர்களது கடமைகளை சுகாதார வைத்திய அதிகாரி மேற்பார்வை செய்வார்.

4. இவர்கள் தமது அலுவலகத்தை தமது பிரிவுக்குள் வரும் பிரதேச சபையிலோ அல்லது தாம் விரும்பிய இடத்திலோ அமைக்கலாம்.

5. இவர்கள் மாதாந்த கலந்துரையாடலில் தவறாது பங்குபற்ற வேண்டும். முன்காரியப்படலம் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்பப்படவேண்டும்.

6. பிரதேச சபையில் இவர்கட்

வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்விணக்கப்பாடு மூன்று தரப்பிற்கும் வெற்றி, தோல்வி என்றில்லாது ஓர் நடுநிலையான முடிவாக தெரிகிறது. எனவே பொது மக்களின் நன்மை கருதி மூன்று தரப்பும் விட்டுக்கொடுத்து ஓர் சுமுகமான முடிவிற்கு வரவேண்டும் என்று வேண்டி நிற்கின்றோம்.

இலங்கையில் வடமாகாண பொது சுகாதார சேவைகளுக்கு ஓர் தனித்துவமும், பெருமையும் உண்டு. யுத்த காலத்திலும், மிக நெருக்கடியான காலங்களிலும் எமது பொதுச் சுகாதார குழுவினர் எமது மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கியுள்ளனர். சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்

**இ. இரவீந்திரன்,**
செயலாளர்,
சுகாதார சுதேச
வைத்தியத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் குழுவாக ஒற்றுமையாக மிக கடினமாக உழைத்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி பெருமை தேடித் தந்துள்ளனர். அந்த ஒற்றுமையை நாம் சிதறவிடக்கூடாது. மீளக்கட்டியெழுப்பவேண்டும் என நான் வினயமாக வேண்டி நிற்கின்றேன்.

எனவே இதனை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மனதில் நிறுத்தி இவ்விணக்கப்பாட்டை ஏற்று பணிக்குத் திரும்பி எமது சேவையை எதிர்பார்த்து நிற்கும் பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது ஒத்துழைப்பு வழங்குவார்கள் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.

## மோட்டார்சைக்கிள் திருட்டு

நெல்லியடி அம்மன் கோவில் கரணவாய் தெற்கு பிரதேசத்தில் உள்ள வீட்டொன்றில் மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயுள்ளதாக வீட்டு உரிமையாளரினால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த வீட்டில் உள்ளவர்கள் திருமணவீட்டுக்குச் சென்று விட்டு இரவு வீட்டுக்கு வந்து மோட்டார் சைக்கிளை பின்புறத்தில் நிறுத்தி விட்டநிலையில் அதிகாலை 4 மணியளவில் எழுந்து பார்த்தபோது வண்டி திருட்டுப்போயுள்ளமை தெரியவந்துள்ளதாக வீட்டு உரிமையாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (18)

## புனரமைப்பின்றிக் காணப்படும் வைத்தியசாலை வீதி

அச்சுவேலி வைத்தியசாலை வீதியானது புனரமைப்பின்றி குண்டு, குழிகளுடன் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதியினை பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலைக்கு செல்வோர் மற்றும் அன்றாட தேவைகளுக்காகச் செல்வோர் என பல தரப்பினர். பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு புனரமைப்பின்றிக் காணப்படும் இந்த வீதியால் பயணத்தை மேற்கொள்வது சிரமம் நிறைந்த ஒரு செயலாகவே காணப்படுவதாக பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்த வீதிய்யை புனரமைத்து போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்தித் தர வேண்டும் என பயணிகள் உரிய தரப்பினருக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# வரம்பு மீறிச் செயற்படும் பிரதேசசபை உறுப்பினர்கள்

## சேவைக்காக ஏங்கும் பொதுமக்கள்

(திருநெல்வேலி)

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சில உள்ளூராட்சி மன்றங்களின் உறுபபினர்கள் சிலர் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி நடப்பதினால் பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகள் முடங்கிக் காணப்படுவதாகப் பொதுமக்கள் பலரினால் குறை கூறப்பட்டுள்ளது.

சில பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டங்கள் ஆளும் கட்சியினாலேயே தோற்கடிக்கப் பட்டதினால் இச்சபைகளின் தவிசாளர்கள் பதவி இழக்க நேரிட்டது. தவிசாளர்களுக்கெதிராக உறுப்பினர்களும் உறுபபினர்களுக்கெதிராகத் தவிசாளர்களும் சில பிரதேச சபைகளில் குற்றச்சாட்டுக்களைத் தெரிவிப்பதினால் சபைகளின் நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களை நேரிலும் தொலைபேசி மூலமும் கடிதம் ஊடாகவும் தொடர்பு கொண்டு கட்சியின் நிர்வாகம் எக்காரணம் கொண்டும் வரவு செலவுத்திட்டம் தோற்றுப் போவதற்குத் துணைபோக வேண்டாம் என வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபோதும் எதுவும் பலனளிக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

கட்சியின் கட்டுப்பாடுகளுக்குமையவே இவ்உறுப்பினர்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அபேட்சகர்களாகத் தெரிவு செய்யப்பட்டு உறுப்பினர்களானார்கள். அதற்குப் பின்னர் சில உறுப்பினர்களின் தான்தோன்றித்தனமான செயல் காரணமாக சில பிரதேச சபைகளின் செயற்பாடுகள் முடங்கிப்போயின. தமது வாக்குகளை அளித்து இவர்களை உறுப்பினர்களாக்கிய வாக்காளர்கள் தமது பிரதேச அபிவிருத்தி முடங்கிப் போனதோடு தமது உறுப்பினர்களும் செயலற்று இருப்பதையிட்டுப்பெரிதும் கவலையடைந்துள்ளனர். எனத் தெரிய வருகிறது.

உறுப்பினர்களுக்கும் தவிசாளருக்கும் முரண்பாடு காணப்பட்டால் அதனைக் கட்சியின் நிர்வாகத்திடம் முறையிட்டு அவர்கள் மூலம் அதனைத் தீர்த்துக் கொள்வதே முறையாகும். சில பிரதேச சபையின் தலைவர்களும் உறுப்பினர்களும் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

கட்சித்தலைமையும் இவர்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்துக் கவலைப் படாமல் மேலோட்டமாக நடந்து கொள்வதாகப் பல பொது மக்களினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தி கருதியும் மக்களின் மேம்பாட்டை நோக்கமாகக்கொண்டும் அவர்களுக்கான பணிகளை மேற்கொள்ளும் வகையிலும் பிரதேச சபைகளை சிறப்பான முறையில் செயற்பட வைப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனப் பல பொதுமக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (137)

## மேல்மாடிக்குச் சென்ற இளைஞன். தவறிவிழுந்து படுகாயம்

(வடமராட்சி)

புதிதாக கட்டப்பட்டு வரும் மேல் மாடி வீட்டை பார்வையிடச் சென்ற இளைஞன் ஒருவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.இவ்விபத்துச்சம்பவம் கடந்த புதன் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையடியில் இடம்பெற்றுள்ளது. இதில் பொலிகண்டி வீரபத்திரர் கோவிலடியைச் சேர்ந்த குருசாமி சுரேந்திரன் (வயது 30) என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்

குறித்த இளைஞனின் உறவினர் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலைக்கருகாமையில் பல்பரிமானங்களில் மேல்மாடி வீடு ஒன்றை கட்டிவருகின்றனர் இதனை நண்பருடன் சென்று பார்வையிட்ட போது மேல் தள இடைவெளியூடாக சுமார் 15 அடி உயரத்திலிருந்து தவறிக்கீழே வீழ்ந்துள்ளான் தலையில் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகிறார்.(116)

## விளையாட்டு விஞ்ஞானத்துறை நிலையத்தில் பதவிகளுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிலையத்தில் பதிவாளர், உதவி விரிவுரையாளர், பயிற்றுவிப்பாளர், விடுதிபெண்பொறுப்பாளர் பதவிகளுக்கு இலங்கைப்பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும்.18-45 வயதிற்குட்பட்டவர்கள் க.பொ.த.(சா/த),க.பொ.த. (உ/த)பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களும் விளையாட்டுத்துறையில் விசேட தகுதியுடையவர்களும் சேவை அனுபவமுடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் யூன் மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிலையம், இல. 100/7 சுதந்திர மாவத்தை, கொழும்பு -07 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும் கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிடல் அவசியமாகும்

விண்ணப்பங்களில் கல்வித்தகைமை, தொழில் தகைமை, சேவை அனுபவம், வேறுதகைமைகள் தெளிவாக குறிப்பிடல்வேண்டும்.என அறிவிக்கப்பட்டுள்ளது. (105)




அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் மறைந்த சுப்பிரமணியம் காண்டீபனின் நினைவாக புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.ரவீந்திரதாஸனால் திறந்து வைக்கப்பட்டது இதில் திறக்கப்பட்ட பஸ்தரிப்பிடத்தை காணலாம்.

## பதிவிறக்கப் பெட்டகம்

பல்கலைக்கழகங்கள் சமூக கலாச்சாரத்தை கட்டமைக்கும் வெளிகளை எப்படி உருவாக்குகிறது என்பதை மேற்கத்திய தத்துவ சிந்தனைகள் துவங்கி இலக்கிய ஆக்கங்கள் வரை நாம் காணமுடிகிறது. பிரெஞ்ச் பல்கலைக்கழகங்கள் 1968-ல் ஒரு புரட்சியை உருவாக்கியது என்றால் அதற்கு பல்கலைக்கழக துறைகள் சிந்தனைத்தளத்தில் செய்த பெரிய மாற்றமே காரணம்.

ஆனால் நமது பல்கலைக்கழகத் துறைகள் இன்றுவரை குண்டுச்சட்டி குதிரை ஓட்டிகளாகவும், அரைத்தமாவை அரைக்கும் ஆட்டுக்கல்களாகவுமே உள்ளன. இப்படி சொல்வது வருந்தத்தக்கதே. ஒரு சில ஆய்வுப்புள்ளிகள் தவிர்த்து பிறதுறை சிந்தனைகள் பல்கலைக்கழக துறைகளில் அதிகம் வெளிப்படவில்லை. குறிப்பாக நாட்டுப்புறவியல், மானுடவியல், வரலாற்றியல் தவிர்த்து தமிழ்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க சிந்தனையை உருவாக்கியதாக கூறமுடியுமா?

மேற்கில் ஹெகல் துவங்கி சமீபத்திய சிந்தனையாளர்களான பிரடரிக் ஜேம்சன் வரை பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் சிந்தனையாளர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் ஒரு சமூக கலாச்சாரத்தினை கட்டமைக்கும் முக்கிய பணியை செய்யக்கூடியவர்கள் என்பதை உணர்ந்து சுயசிந்தனைகொண்ட ஆழ்ந்த வாசிப்பும், சரியான ஆராய்ச்சியும், சிறந்த திறனாய்வையும் வெளிப்படுத்த வேண்டும்.

ஏதோ ஒரு மூலையில் உள்ள பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி எப்படி சாமான்யனை பாதிக்கும் என்கிற எண்ணமும், படிப்பு என்பது பிழைப்பிற்கானதாகவும் கருதும் போக்கு நிலவுகிறது. உண்மையில் கிரேக்க தத்துவம் துவங்கி இன்றைய பின்நவீன, பின்-மார்க்சிய, பின்-பெண்ணிய அதாவது போஸ்டிஸம், [பின்னையவாதம் எனலாமா?] எனப்படும் சிந்தனைகள்வரை மேற்கில் பல்கலைக்கழகங்களிலிருந்தே உருவாகி பரவலானவை.. அவைதாம் வெகுசனங்களின் உளவியலை, அரசியலை கட்டமைத்து உள்ளது. இந்தியாவில்கூட பண்டைய தத்துவங்கள் நாளந்தா போன்ற பல்கலைக்கழகங்களில் விவாதித்து உருவானவையே என்று படிக்கிறோம்.

ஆகையால் பல்கலைக்கழகங்கள் உண்மையில் சமூக சிந்தனையுடன் இயங்கவும், சமூகத்தின் கலாச்சாரத்திற்கான உள்தளத்தின் மின்னியக்கியாக அதாவது அண்டர்-கரண்ட்டாக செயல்படவேண்டிய முக்கியத்துவத்தை உணரவேண்டும். அதற்கான வாய்ப்புகள் அதிகம் கொண்டது பல்கலைக்கழகங்களே. – ஜமாலன்

நான் படிச்ச வரையில் நவீன தமிழ் இலக்கியத்தில் காதலியை, நண்பனை, அப்பா அம்மாவை, தாத்தா பாட்டியை, மகன் மகளை, அக்கா தங்கச்சியை, அண்ணன் தம்பியை, கள்ளக்காதலியை, வைப்பாட்டியை, பாலியல் தொழிலாளியை, குருவை, நாயை, பூனையை, குருவியை, மாட்டைப் பற்றியெல்லாம் இலக்கியத்தரமாக உருகி உருகி எழுதியிருக்கிறார்கள்.

பொண்டாட்டியைப்பற்றி அப்படி ஏதும் படித்ததாக நினைவில்லை. அப்படியே எழுதினாலும் செண்டிமெண்டாக, ரொமாண்டிசைஸ் செய்து கடமைக்கு எழுதியிருப்பார்கள்.

தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் பேட்டி கொடுக்கும் போது மட்டும் வளைந்து நெளிந்து, என் மனைவி இல்லையென்றால் இந்த எழுத்தாளனே இல்லை. என் கிறுக்குத்தனங்களை, என் கோபத்தை, என் அடாவடியை, என் பைத்தியக்காரத்தனத்தை சகித்துக்கொண்டு என் மீது அன்பு மழை பொழிந்து கொண்டிருப்பவள். என் எழுத்துக்கு இடையூறு இல்லாமல் தேநீர் போட்டு கொடுப்பவள் என்றே சொல்லியிருபபார்கள்.

தான் செய்வது தெரியாமலேயே, தன் மனைவியை அடித்து உதைத்து ஒடுக்கி வைத்திருப்பது வேறு. எல்லாம் தெரிந்தும், தான் செய்வதும் நன்கு புரிந்து, என்னை சகித்துக்கொண்டிருப்பவள் மனைவி என சொல்வதற்கு எவ்வளவு தடித்தனமும் திமிர்த்தனமும் வேண்டும்?

அந்த பேட்டியின் உள்ளர்த்தம் என்ன? பொண்டாட்டியை போட்டு அடித்து உதைத்து மூலையில் போட்டு நசுக்குகிறேன். அவள் வேற வழி இல்லாமல், மனதிற்குள் திட்டிக்கொண்டே வீட்டில் ஒரு ஜடப்பொருளாக இருக்கிறாள் என்பதுதானே?

எந்தப்பெண்ணாவது என்னை சகித்துக்கொண்டு அன்புடன் வாழ்கிறார் என் கணவர் என பேட்டி கொடுத்தது உண்டா?

வாழ்வில் “பொண்டாட்டிக்கு” இடம் இருந்தால்தானே எழுதும் கதையில் இயல்பாக பொண்டாட்டிக்கு இடம் வரும். அதனால் தான் பொண்டாட்டி கதைகளே நவீன தமிழிலக்கியத்தில் இல்லை.

வெளிநாட்டுக்காரன் நவீன தமிழிலக்கியத்தைப் படித்தால் தமிழர்களுக்கு பொண்டாட்டியே இல்லை என்று நினைத்துக் கொள்ளக்கூடும். – அராத்து

# வெளிநாடு சென்றவர்களும் தேர்தலில் வாக்களிக்க வாய்ப்பு

## ஆராய்கிறது தேர்தல்கள் திணைக்களம்

வெளிநாடுகளிலுள்ள 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு வாக்களிப்புக்கான வசதிகளை எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுப்பது தொடரபில் நடவடிக்கை எடுக்கப்படுமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நாட்டில் மொத்தமாக 150 இலட்சம் வாக்காளர்கள் உள்ள போது 20 இலட்சத்துக்கு மேற்பட்டோர் வெளிநாடுகளில் வாக்களிக்க வாய்ப்பின்றி உள்ளனர். இது தொடர்பிலான சட்ட திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதில் தேர்தல் திணைக்களம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டவர்களுக்கு அந்தந்த நாடுகளில் இருந்தவாறே வாக்களிக்கும் வசதிகளை பெற்றுக்கொடுக்க முன்வந்துள்ளமையைச் சுட்டிக் காட்டிய தேர்தல் ஆணையாளர் நம்மவர்கள் 20 இலட்சம் பேர் தேர்தல்களில் வாக்களிக்காமல் இருப்பதென்பது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாடொன்று தேர்தல் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இம் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே தேர்தல் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவிக்கையில்,

2014 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பு திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கிணங்க வாக்காளர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்கின்ற பி. சீ. படிவங்கள் இம்மாதம் 16 ஆம் திகதி முதல் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் படிவங்களை மீளப்பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் எதிர்வரும் யூன் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். இந்த நடவடிக்கை யூலை 15 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும். வாக்காளர்கள் இறுதி வரை தாமதிக்காமல் துரிதமாக தமது விண்ணப்பப்படிவங்களை மீள கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேவேளை, வாடகை வீடுகளில் வசிப்போரும் வாக்களிக்கும் உரிமை உடையவர்கள். அவர்களும் படிவங்களைப் பூர்த்திசெய்து மீள கையளிக்க வேண்டும்.

பிரதான குடியிருப்பாளர்கள் அதற்குத் தடையாக இருந்தால் அது குற்றமாகும். தங்களது பெயர்களை தேரதல் இடாப்பில் பதியத் தவறுபவர்களுக்கு வாக்களிப்புக்கான வாய்ப்புகள் இல்லை என்பதை தேர்தல் திணைக்களம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது. எனினும் சிலர் இது தொடர்பில் அலட்சியமாக இருந்து விட்டு இறுதி நேரத்தில் எம்மிடம் முறையிடுகின்றனர். ஒவ்வொரு வருடமும் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிய வேண்டும் என்பது பலருக்குத் தெரியாது.

இது தொடர்பில் தெளிவூட்டும் நடவடிக்கைகளை இம்முறையும் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியை வாக்காளர் தினமாகப் பிரகடனப்படுத்தி நுவரெலியா, புத்தளம், கிளிநொச்சி, அம்பாறை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நடை பவனிகள், துண்டுப்பிரசுர விநியோகம், வீதி நாடகங்கள் போன்ற விழிப்பூட்டும் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச கிராம சேவை அதிகாரிகள் ஆகியோரின் ஏற்பாட்டில் வாக்காளர்களைத் தெளிவூட்டும் செயறறிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. கல்வியமைச்சு மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களின் உதவியுடன் பாடசாலை மட்டத்திலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## தாய்லாந்து பிரதமரை விடுவிக்க வேண்டும்

### இது ரணிலின் கோரிக்கை



தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் யின்லுக் சின்வத்ராவை விடுதலை செய்யுமாறு எதிர்க கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சின்வத்ராவை உடனடியாக விடுதலை செய்யுமாறு நாடாளுமன்றில் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவ ஆட்சியாளர்கள் சின்வத்ராவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையின் நாடாளுமன்றிற்கு கடந்த ஆண்டு விஜயம் செய்து உரையாற்றிய சின்வத்ராவை விடுதலை செய்யுமாறு இராணுவ ஆட்சியாளர்களிடம் கோரும் தார்மீக பொறுப்பு இலங்கையிடம் காணப்படுகின்றது.

மக்களினால் வாக்களிக்கப்பட்டு தெரிவான பிரதமர் ஒருவரை வீட்டுக் காவலில் வைத்திருக்க அனுமதிக்க முடியாது.

சுயாதீனமானதும் ஜனநாயகமானதுமான தேர்தல் ஒன்றின் மூலமே சின் வத்ராவை பதவி நீக்க முடியும் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## வடக்கு அரசியல்வாதிகளின் நீதி மூலங்கள் எவை?

### அதிர்ச்சித் தகவல் அம்பலம்

(கொழும்பு)

வடக்கின் தமிழ் அரசியல்வாதிகளுக்கு பணம் கிடைப்பது எப்படி என்றும் அதன் மூலங்கள் எது என்றும் தென்னிலங்கை சிங்கள நாளிதழ் ஒன்று அதிர்ச்சித் தகவல் வெளியிட்டிருக்கிறது.

வடக்கு தமிழ் அரசியல்வாதிகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் நிதி உதவிகளை வழங்கி வருவதாக அரசுக்கு ஆதரவான திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சில பல்கலைக்கழக மாணவர்களுக்கு மோட்டார் சைககிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கனடா, நோர்வே, சுவிட்சர்லாந்து, பிரிடடன், ஜெர்மன் போன்ற நாடுகளுக்கு விஜயங்களை செய்ய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு புலம்பெயர் தமிழர்களே உதவிகளை வழங்கியுள்ளனர். இவ்வாறு பணம் பெற்றுக் கொண்ட ஓர் அரசியல்வாதி தற்போது லண்டனுக்கு விஜயம் செய்துள்ளதாக திவயின சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## வற்றாப்பளை பொங்கல் ஏற்பாடுகள் மும்முரம்

முல்லைத்தீவிலுள்ள வற்றாப்பளை, கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் ஜூன் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளதை முன்னிட்டு, அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் சு.இரவீந்திரன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இம்முறை பொங்கலுக்கும் அதிகளவான பக்தர்கள் வருகை தருவார்கள் என்பதினால், ஆலயத்திற்கு வரும் உள்ளக வீதிகள் செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே போல ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளும் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் இளைஞர் ஒருவர் கைது

(கிளிநொச்சி

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி கிளையின் அமைப்பாளர் ஜெகதீஸ்வரன் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கிளிநொச்சி கிளையின் அமைப்பாளர் ஜெகதீஸ்வரனால் எதிர்வரும் 26 ஆம் திகதி கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் ஜெகதீஸ்வரன் பரந்தனில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. ஜெகதீஸ்வரன் கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் உத்தியோகத்தர் எனபது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விழிப்புலன் அற்றவர்கள் வாழ்வில் ஒளியேற்றிய டாக்டர் நடராசா

யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் பார்வையிழந்தவர்களுக்காக தனது சொந்தப் பணத்தில் வருடாந்தம் நிதி உதவி வழங்கி வந்த டாக்டர் க.நடராசா கடந்த 28 ஆம் திகதி தனது பூவுலக வாழ்வை நிறைவு செய்துள்ளார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மூளாய் கிராமத்தில் வைத்தியராக சமூகப் பற்றாளனாக, ஆன்மீக வாதியாக ஏழைகளின் தோழனாக வாழ்ந்த பெரியார் கடந்த 28.04.2014 இல் 85 ஆவது அகவையில் இறையடி சேர்ந்தார்.

அகில இலங்கையில் அதாவது மாத்தளை, அனுராதபுரம், கம்பளை, கல்முனை, சங்கானை ஆகிய அரசாங்க வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரியாக வலம் வந்ததுடன் சேவையாற்றும் காலங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி மக்கள் மனதை வென்ற பெருந்தகையாளர்.

மேலும் அவரது வாழ்நாளில் பார்வையற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்பது அவரது உள்ளார்ந்த சிந்தனை.

அந்தச் சிந்தனைக்கு மெருகூட்டி அதற்கான கருத்திட்டங்களை முன்மொழிந்து செயலாற்றி பலரது நல்வாழ்வுக்கு வித்திட்ட செம்மல் என்றால் நடராஜா டாக்டர் தான்.

மேலும் ஏழை, எளியவர்களுக்கு எவ்விதத்திலும் உதவிட வேண்டும் என்ற எண்ணமும் சிந்தனையும் சதாகொண்டதனால் அவர் ஏழைகளின் தோழன் எனவும் வர்ணிக்கப்பட்டவர்.

டாக்டர் கந்தப்பு நடராசா நேர்மை, அன்பு, நடுநிலை மற்றும் கடின உழைப்பு என்பன இவரிடம் மறக்கமுடியாத குறிகாட்டிகளாகும்.

அமரர் நடராஜா வாழ்ந்த முறைமை இன்றைய இளம் சந்ததியினருக்கு ஓர் சிறந்த வழிகாட்டியாகும்.

இவரின் பாதையில் அனைவரும் பயணித்தால் நலிவுற்ற சமூகம் மேன்மை அடையும் என்பது திண்ணம்.

- செ.ரமேஷ்

## வடக்கில் பார்த்தீனியம் தெற்கில் சிணுங்கி

### மரபுவழி விவசாயத்துக்கு ஆப்பு

பயிர்களை மோசமான முறையில் நாசம் செய்யும் ஒருவகை மூலிகைச்செடி கொழும்பு மாவடடத்திலும் பரவி வருவதாக கொழும்பு மாவட்ட விவசாய கமிட்டி கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தற்சமயம் கடுவலை, மாலபே ஆகிய பகுதிகளில் பரவி வரும் தொட்டால் சிணுங்கி என அழைககப்படும் செடியையொத்த இந்த செடியின் விதைகள் களனி கங்கை நீருடன் கலந்துசென்று களனி கங்கையை சூழவுள்ள கொலன்னாவை பகுதி வரை பரவி வர ஆரம்பித்துள்ளதாம்.

மூலிகைச்செடியின் விதை சுமார் 50 வருட காலத்துக்கு பழுதடையாமல் இருக்கும் வல்லமை உள்ளதாம்.எனவே இதனை அழிப்பது கடினமான காரியம் எனவும் மரக்கன்றுகளில் நோயை இனங்காணும் பிரிவின் பணிப்பாளர் விந்தியா பஸ்நாய்க்க கொழும்பு மாவட்ட விவசாய கமிட்டி கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த மூலிகைச்செடியினை உட்கொள்ளும் கால்நடைகளும் இறக்க நேரிடும் எனவும் இந்த செடி பரவுவது பாரிய சிக்கலை உருவாக்கும் என மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் லிவேரா தெரிவித்தார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக பணிப்புரை விடுத்த கொழும்பு மாவட்ட செயலாளர் கமல் பத்மசிறி, இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் கமநலசேவை அதிகாரிகள் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

21. 0.25 ஐ 0.5 ஆல் பெருக்கினால் கிடைக்கும் விடை எது?

1) 1.25 2) 12.5 3) 0.125 4) 125.0

22. 2Kg 250g கடலை ரூ135.00 ஆயின் 3Kg 750g கடலையின் விலை எவ்வளவு?

1. ரூபா195.00 2. ரூபா165.00 3. ரூபா 225.00 4. ரூபா215.00

23. மனிதர்களுடைய வாழ்க்கையில் ஒருமுறை மட்டும் நிகழாதது

1. மரணம் 2. நோய் 3. பிறப்பு 4. திருமணம்

❊ **24ம், 25ம் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடவும்.**

24. கண்தெரியாத ஒருவர் தெருவைக் கடக்க முற்படும் போது

1. நாம் அவரைக் கண்டால் தெருவோரமாக விலகிச் செல்ல வேண்டும்.
2. நாம் அவருக்கு எம்மால் இயன்ற உதவியினைச் செய்தல்
3. அவரை சைக்கிளால் இடித்து விழுத்துதல்.
4. தெருவோரமாக தள்ளி விடுதல்

25. தெருவோரத்திலே காணப்படுகின்ற நீர்க்குழாய் திறந்திருப்பின், தரம் 5 மாணவன் என்ற ரீதியில் நீர் யாது செயவீர்?

1. அதைப்பார்த்து மகிழ்ச்சியடைய வேண்டும்.
2. குழாயை மூடப்போனால் உடுப்புக்கள், கைகால் நனைந்துவிடும் என்று அமைதியாக இருக்க வேண்டும்.
3. தன்னால் குழாயை மூடமுடியாவிட்டால் பெரியோரை அழைத்து அதை மூடுவிக்க வேண்டும்.
4. அதனை வீட்டிலே பெற்றோருக்குகூறி உரையாட வேண்டும்.

26. **80m நீளம் கொண்ட சதுரவடிவக் காணி ஒன்றிற்கு 10m இடைவெளியில் தூண்கள் நாட்ட வேண்டுமாயின் அக்காணி முழுவதற்கும் நாட்டுவதற்கு தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?**

1. 32 2. 33 3. 34 4. 35

**27ஆம் 28ஆம் வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக**

27. மா : பழம், வெண்டி : (பூ, இலை, காய்)

28. மேசை : மரம், பானை : (களிமண், சட்டி, கால்)

❊ **29ம், 30ம் வினாக்களுக்குப் பின்வரும் ஆங்கில எழுத்துக்களையும் அவை குறிப்பிடும் விடயங்களையும் பயன்படுத்தி விடை எழுதுக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| R | - | ஆண்பிள்ளை | Q | - | பெண்பிள்ளை | P | - | காலையில் |
| S | - | பாடசாலை | T | - | நோக்கி | M | - | வீடு |
| N | - | மகிழ்ச்சியுடன் | I | - | செல்கின்றான் | L | - | வருகின்றான் |
| W | - | திரும்பி | | | | | | |

29. பின்வரும் ஆங்கில எழுத்துக்கள் எதனைக் குறிக்கின்றன.

**Q, P, S, T, I**

1. பெண்பிள்ளை பாடசாலையை நோக்கி காலையில் செல்வது மகிழ்ச்சியுடன்
2. பெண்பிள்ளை காலையில் பாடசாலை நோக்கி செல்கின்றது
3. பெண்பிள்ளை காலையில் பாடசாலையைநோக்கி மகிழ்ச்சியுடன் செல்கின்றது.

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I


1 மணி 15 நிமி

# கல்வி முரசு




முதலாம் இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவங்கள் ஒரே மாதிரியாகத் தெரிந்தாலும் எல்லா வரிசைகளிலும் ஓர் உருவத்தில் குறைபாடு உண்டு. அதைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

1)



i ii iii iv

2)



i ii iii iv

**கீழே உருவில் தரப்பட்டுள்ள பிராணியை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**

3)



1. இது வீட்டில் வசிக்கும் மிருகம்
2. இது தண்ணீரில் நீந்தாது. பகலில் பறந்து திரியும்
3. இது ஒரு முலையூட்டி. இரவில் பறந்து திரியும்


4)



1. இது ஒரு மிருகமாகும். பால் தராது
2. இது வீட்டில் வாழும் மிருகம். காவல்காக்கும்.
3. இதற்கு நான்கு கால்கள் உண்டு. ஓர் மிருகம் அல்ல.


**5-6 வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்கோலங்களை அவதானித்து அடுத்துவரும் உருவை A, B, C, D, E, F, ஆகியவற்றிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

5)



A B C D E

6)



A B C D E F

7) சுப்பா கடை ஒன்றிற்குச் சென்று ரூ100ஐக் கொடுத்து 3 பேனாக்களும் 4 பென்சில்களும் வாங்கினார். பேனா ஒன்றின் விலை 15 ரூபாவும் பென்சில் ஒன்றின் விலை 5 ரூபாவும் ஆகும். அப்பாவிற்கு மீதியாக கிடைக்க வேண்டிய பணம் யாது?

1. 70ரூபா 2. 60ரூபா 3. 35 ரூபா 4. 40 ரூபா

8. கமலா ஓர் ஆசிரியை அவள் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வார இறுதியில் சாவகச்சேரி சந்தைக்குச் சென்று வாங்குவாள். அதற்குக் காரணமாக அமைவது பின்வருவனவற்றுள் எது என்பதை தெரிக.

1. ஒரே இடத்தில் எல்லாப் பொருட்களையும் வாங்க முடியும்.
2. தனக்கு விடுமுறை கிடைப்பதால்
3. வீட்டுக்கு அருகில் இருப்பதால்.
4. சந்தையில் பொருட்கள் மலிவு என்பதால்.

9. கடந்தசில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சல் பரவி வந்தது. ஆனால் தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் ஒரு மாணவர்கூட டெங்கு நோயினால் பாதிக்கப்படவில்லை. இதற்கு காரணமாக அமைவது?

1. பாடசாலைகளுக்கு அருகில் வைத்தியசாலை அமைந்திருப்பதால்.
2. பாடசாலைச் சமூகம் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதால்.
3. அவர்கள் எல்லோரும் கற்றவர்கள் என்பதனால்.
4. அங்கு டெங்கு நுளம்புகள் இல்லை.

**10. தரம் 4 மாணவர்களுக்கு அவர்களது ஆசிரியர் பின்வரும் வாக்கியங்களை கரும்பலகையில் எழுதிவிட்டு சரியாக ஒழுங்குபடுத்துமாறு கூறினார்.** அவர் எழுதிய வாக்கியங்கள் வருமாறு.

1. மறுநாட்காலை வயலுக்குச் சென்று "பயிர்கள் உண்டாகி இருக்கின்றதா" என்று பார்த்தான்.
2. விதை நெல் முளைத்திருக்கின்றதா என்று பார்த்தான்.
3. கமக்காரன் வயலில் நெல் விளைவிப்பதற்காக வயலை ஒழுங்குபடுத்தினான்.
4. சில நாட்களின்பின் நெற்பயிர்களைக் கண்டு கமக்காரன் சந்தோஷம் அடைந்தான்.
5. வயல் முழுவதும் முளைத்த நெல்லை நட்டான்.

*** இவ் வசனங்களை கஜானி, ஆரஷன், தனுஷிகா, என்ற 3 மாணவர்கள் ஒழுங்குபடுத்திய விதம் வருமாறு. அவர்களுள் சரியாக ஒழுங்குபடுத்தியோர்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. கஜானி | - | 1, | 5, | 3, | 2, | 4 |
| 2. ஆரஷன் | - | 3, | 2, | 5, | 1, | 4 |
| 3. தனுஷிகா | - | 2, | 3, | 5, | 1, | 4 |


11. தங்கலட்சுமி ரீச்சர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், அவரது சித்தப்பா வீட்டிற்குச் செல்வார். ரீச்சர் நேற்று முன்தினம் சித்தப்பா வீட்டிற்குச் சென்றிருந்தால் நாளை மறுதினம் என்ன கிழமை.


1. வியாழன் 2. புதன் 3. சனி 4. செவ்வாய்.


12. சாருமதி மீசாலையில் தனது வீட்டுத்தோட்டத்தில் ஒரு கத்தரிச் செடியும் அடுத்து ஒரு மிளகாய்ச் செடியும், அதற்கடுத்து ஒரு வெண்டிச் செடியும் மாறி மாறி நட்டாள். அந்த வரிசையில் 25 வது செடி யாது?

1. மிளகாய் 2. கத்தரி 3. வெண்டி 4. சொல்லமுடியாது

13.









1. 22 2. 17 3. 15 4. 30



14.  படத்தில் காட்டப்பட்டுள்ள தாயக்கட்டைக்கு எத்தனை விளிம்புகள் உள்ளன.

1. 08 2. 06 3. 12 4. 09


*** கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழி ஒவ்வொன்றினதும் கருத்தைத் தருகின்ற மிகப் பொருத்தமான கூற்றின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

**15. ஆழமறியாமல் காலை விடாதே**

1. ஆழமான இடங்களில் காலை விட்டால் அபாயம்.
2. எவரையும் ஆழம் அறியாமல் நம்பக்கூடாது.
3. ஒன்றின் இயல்பை அறியாது அதில் பிரவேசிக்கக்கூடாது.
4. கிணற்றின் ஆழம் அறிந்த பின்னர் இறங்குதல் வேண்டும்.

**16. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு**

1. யாருக்கும் அளவுக்கு மேல் உதவக்கூடாது
2. அளவுக்கு அறியாமல் உதவி செய்தால் கஷ்ரப்பட வேண்டும்.
3. வீண்செலவு செய்யின் அச்செலவின் கணக்கை அறிந்திருத்தல் வேண்டும்.
4. ஆற்றிலே எதனைப் போட்டாலும் அளந்து போடுதல் வேண்டும்.

17.  படத்தில் காட்டப்பட்டுள்ள நிழற்றிய பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

1. $^1/_{32}$ 2. $^3/_4$ 3. $^3/_{16}$ 4. $^3/_8$

*** ஒரு வகுப்பறையிலுள்ள நான்கு மாணவர்களது உயரங்கள் தரப்பட்டுள்ளன. அதனை வாசித்து விளங்கி அதன் கீழுள்ள 18ம், 19ம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

17.
காதர் என்பவன் சகீனாவை விட உயரமானவன்
சகீனாவும் ரஸ்மியாவும் ஒரே உயரத்தை உடையவர்கள்
நரேஷ் என்பவன் ரஸ்மியாவை விட குள்ளமானவன்

**18.** கீழேதரப்பட்ட கூற்றுக்களுள் சரியான கூற்று எது?

1. சகீனாவும் நரேஷ் உம் ஒரே உயரத்தை உடையவர்கள்
2. காதர் என்பவன் எல்லோரையும்விட உயரமானவன்
3. நரேஷ்உம் ரஷ்மியாவும் உயரத்தில் சமமானவர்கள்
4. சகீனாவைவிட காதர் கட்டையானவன்.

**19.** பின்வருவனவற்றுள் பிழையான கூற்று

1. காதர் என்பவர், எல்லோரிலும் உயரமானவன்.
2. காதரும் நரேஷஉம் உயரத்தில் சமமானவர்கள்
3. சகீனாவும் ரஷ்மியாவும் உயரத்தில் சமமானவர்கள்

**20.** ⅄K L ஆகிய ஆங்கில எழுத்துக்களை தளவாடியினூடாக நோக்கும் போது பின்வருவனவற்றுள் எது சரியானது?

1. ⅃ꓘ⅄ 2. ꓘ⅃⅄ 3. ⅄ꓘ⅃ 4. ꓘL⅄





மகிந்த சிந்தனையின் கீழ் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குருநகரில் அமைந்துள்ள நண்டுத் தொழிற்சாலை, குருநகர் மீன்வலை தொழிறசாலை, நாவாந்தறையில் அமைந்துள்ள கடல் வள தொழிற்சாலை, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நேரில் சென்று பார்வையிடுவதையும், அருகில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் வடமாகாண தொழில்துறை பணிப்பாளர் கே.சிவகரன் நிற்பதையும் காணலாம். (படங்கள்: கே.நந்தகுமார்)

## அச்சுவேலி பேருந்து தரிப்பிடத்தில் மலசலகூட வசதி இல்லை

அச்சுவேலி பேருந்து தரிப்பிடப் பகுதியில் மலசலகூட வசதியின்மையால் புயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள் கின்றனர்.

அச்சுவேலி பேருந்து தரிப்பிடமானது பிரதான போக்குவரத்து வழித்தடங்களைக் கொண்ட தரிப்பிடமாக அமைந்து காணப்படுகின்றது. பல்வேறு இடங்களுக்குச் செல்வதற்கு பயணிகள் வந்து கூடுவதால் அங்கு மலசலகூடத் தொகுதி ஒன்று அமைக்கப்படுவது அவசியம் என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலியிலிருந்து யாழ்நகர் நோக்கி 10 நிமிடத்திற்கு ஒரு தடவை தனியார் சிற்றூர்தி சேவையில் ஈடுபடுவதும் இங்கு குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும். இதனால் அதிகாலை வேளையில் சாரதி நடத்துநர்கள பஸ் நிலையத்திற்கு வருகை தருவர்.

அத்துடன் வங்கி மற்றும் சந்தைக்கு வருவோரும் இவ்வாறு மலசலகூட வசதி இன்மையால் பல்வேறு அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர்.

எனவே, பயணிகளின் நன்மை கருதி பஸ்தரிப்பிடப் பகுதியில் மலசலகூட கட்டடத் தொகுதி ஒன்றை அமைத்து வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பயணிகள் சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கோரியுள்ளனர். (85)

# சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் கண்காட்சி

(கொழும்பு)

கைத்தொழில் மயமாக்கலில் புது யுகத்தை நோக்கி இலங்கையை இட்டுச் செல்ல என்ற மகுடத்திலான சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில கண்காட்சியை (SMIDEX 2014) பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பில் அமைந்துள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சிக் கூடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட மேற்படி கண்காட்சியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவினதும் பிரதியமைச்சர் வீரகுமார திசாநாயக்க அவர்களதும் அழைப்பின் பேரில பிரதம விருநதினராகக் கலந்துகொண்ட அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

முன்பதாக பிரதான வாயிலில் அதிதீகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து காடசிக் கூடத்தின் பிரதான வாயிலை அமைசசர் பசில் ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக திறந்து வைத்ததையடுத்து மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டது.



கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 45 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இக்கண்காட்சியானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் உரைகளை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் நவாப் ரஜாப்தீன் பிரதியமைச்சர் வீரகுமார திசாநாயக்க, கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் ஆகியோர் உரை நிகழ்த்திய அதேவேளை, நாடளாவிய ரீதியில் அமைச்சினால் 'முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஒழுங்கமைக்கப்பட்ட மேற்படி கண்காட்சி தொடர்பாகவும் அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி விளக்கவுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, றிசாட் பதியுதீன் மற்றும் சிரேஷ்ட அமைச்சர் எ.ஏச்.எம். பௌசி ஆகியோருக்கு நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தார்.

அதனையடுத்து காட்சிக் கூடங்களுக்கு அமைச்சர் உள்ளிட்ட அதிதிகள் விஜயம் மேற்கொண்டு துறைசார்ந்தோருடன் கலந்துரையாடினார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சின் செயலா ளர் அனுர சிறிவர்த்தன, உள்ளிட்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினதும், அமைச்சின் கீழான நிறுவனங்களினதும் துறைசார்ந்த அதிகாரிகளுடன் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## தனிப்பட்ட பிணக்கு பொது மக்களை எந்தவகையிலும் பாதிக்கக்கூடாது

எனக்கும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் இடையிலான தனிப்பட்ட முரண்பாட்டை தவறாக வழி நடாத்தியுள்ளார் சங்கானை பொதுச் சுகாதார பரிசோதகர். இதனால் நூற்றுக்கணக்கான பொது மககள் பாதிக்கப்பட்டுள்ளனர். வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ் விடயத்தில் உடனடி விசாரணை மேற்கொண்டு ஸ்கந்தா மாஸரர் ஞாபகார்த்த குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வுகண்டு 350 குடும்பங்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும்.

சங்கானை சு.வைத்திய அதிகாரி அறிக்கையிடுவதில் மட்டுமே வல்லவர். மக்கள் குறைதீர்க்ககூடிய ஒருவர் அல்ல. இவ்வாறு ஸ்கந்தா மாஸ்ரர் ஞாபகார்த்த குடிதண்ணீர் திட்டத்தின் உரிமையாளர் திருமதி பேபிரோஜா ஸ்கந்தகுமார் கவலையுடன் தெரிவித்தார்.

நாம் வழங்கும் குடிதண்ணீர் திட்டம் மனிதநேயம் மிக்க திட்டம். எமது கிராமத்திலிருந்து 15 இற்கும் மேற்பட்ட நன்னீர் நிலைகளில் இருந்து வலிகாமம், தீவகத்திற்குக்கூட குடிதண்ணீர் செல்கின்றது.

ஆனால் ஸ்கந்தா மாஸ்ரரின் குடிதணணீர் திட்டம் மட்டும்தான் இந்தப் பொதுச் சுகாதார பரிசோதகருக்குத் தெரியும்.

இத்திட்டத்தை மலக்கிருமி என்ற வேணடாத சொற்பிரயோகங்களை ஆவணமின்றி பொய்யாக பொதுச் சுகாதார பரிசோதகர் நிலைநிறுத்தியுள்ளார்.

இப் பிரச்சினைக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் இவ்விடயத்தில் உடன் தீர்வுகாண முயலவேண்டும்.

இலங்கையில் வடக்கு ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் கவனத்திற்குக் கொண்டு வந்து சட்டத்தின் முன் நடவடிக்கை எடுப்பதற்கு எமது குடும்பம் தயாராகியுள்ளது.

பிரதேசத்தின் மக்களின் அபிவிருத்தியில் பிரதேச செயலகமும் பிரதேச சபையும் அக்கறையுடன்

ஏன் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி முரணாக செயற்படுகின்றார் என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

ஆதாரமில்லாத எச் செயற்பாடுக்கும் விரைவில் நாம் தீர்வு காண்போம், மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவோம். இவ்வாறு ஆணித்தரமாக தெரிவித்தார். மூளாய் ஸ்கந்தா மாஸ்ரர் ஞாபகார்த்த குடிதண்ணீர் திட்ட பொறுப்பாளர் திருமதி பேபிரோஜா ஸ்கந்தகுமார். (92)

# நல்லூர் கந்தசாமி கோயிலில் இன்று கற்பூரத் திருவிழா

முருகன் என்றால் அழகன் என்று பொருள். அந்த அழகன் முருகன் கோவில் கொணடு எழுந்தருளி வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் புரியும் தலம் தான் நல்லூர் கந்தசுவாமி கோவில். கலியுகவரதனான கந்தன் நல்லூரானுக்கு இன்று கற்பூரத் திருவிழா நடைபெறுகின்றது.

இன்று பகல் முருகனுக்கு 1008 சங்குகளால் சங்காபிஷேகம். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன் நல்லூரானுக்கு நடைபெறுகின்ற இந்த சங்காபிஷேகம் காண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான்முந்தி நீ முந்தி என்று அடியார்கள் முண்டியடித்துக்கொண்டு வழிபாடியாற்றும் அழகே தனி. இது கிடைத்தற்கரிய ஒன்று.

நல்லூர் இன்று விழாக்கோலம் பூண்டு காண்டபடும் முருகனு[illegible] ஆலய கோபுர வாசல் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இரண்டு பக்கமும் வாழை மரங்கள் மங்களகரமான மஞ்சள் நிறப் பழக்குலைகளுடனே கட்டப்பட்டிருக்கும் அழகு பக்திபூர்வமானது. எங்கு திரும்பினாலுமே அடியார் கூட்டம். "முருகா! முருகா!!" என்ற கோஷத்துடன் ஆலயத்தை வலம் வரும் அற்புதக் காட்சியை வேறெங்குமே காணமுடியாது.

மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்த தினமான இன்றைய வைகாசி ஞாயிறு நன்னாளில் கந்தனுக்குத் திருக்கல்யாணம். அழகன் முருகனை இன்று மணவாளக் கோலத்திலே கண்டுகளிக்கலாம். இச்சா சக்தியான வள்ளியம்மை வலப்பக்கமும் கிரியாசக்தியான தெய்வானையம்மை இடப்பக்கமும் இருக்க நடைபெறுகின்ற திருக்கல்யாணக் காட்சி அருள்மயமான அற்புதத் திருக்கட்சியாகும்.

இதில் இன்னொரு விசேஷம் என்னவெனில் கல்யாணம் ஆகாத கன்னியரும் காளையரும் இன்று இத் திருக்கல்யாண நிகழ்வைப் பார்த்தால் அவர்களுக்கு விரைவில் கல்யாணம் ஒப்பேறுமாம் என்று ஓர் ஐதீகம் நிலவுவதால் இங்கு வாலிபர் யுவதிகளும் இக்காட்சியைக் காண வருவார்கள். அத்துடன் முருகன் திருக்கல்யாணம் என்றால் சொல்லவா வேண்டும்? மாப்பிள்ளைக் கோலத்திலே ஷண்முகப் பெருமான் வீற்றிருக்கத் த்ங்க நகைகளாலும் மலர் மாலைகளாலும் அலங்கரிக்கப்பெற்ற இரு சக்திகளோடும் கந்தன் கல்யாணக்காட்சி பார்க்கப் பூர்வஜென்ம புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

திருக்கல்யாணம் நிறைவுற்றதும் அழகிய பல்லக்கிலே ஆறுமுக சுவாமி ஊர்வலம், மங்கள இசை முழங்க முன்னே கற்பூரஜோதி ஒளிர அந்தக் கற்பூர ஒளியிலே கந்தனைக் காணும் பாக்கியம் அற்புதம்! அற்புதம்!!

இது எத்தனை பேருக்கு இன்று கிடைக்குமோ? அத்தனை பேரும் புண்ணியஞ் செய்த பாக்கியசாலிகளே! ஆகவே, முருகன் பக்தர்கள் இன்று நல்லூரில் நடக்கும் கற்பூரத் திருவிழாக்காண சேரவாரும் ஜெகத்தீரே என அழைக்கப்படுகின்றனர்.

தெய்வத்தமிழ்ச்சுடர்
கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

# சிரியாவுக்கு எதிரான தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச்சபையில் தோல்வி




ஐ.நா. பாதுகாப்பு சபையில் சிரியாவுக்கு எதிரான தீர்மானம் தோல்வியடைந்துள்ளது. சிரியாவில் அதிபர் பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக கடந்த 3 ஆண்டுகளாக கிளர்ச்சி நடந்து வருகிறது. இங்கு அரசு ஆதரவு படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் எதிராக நடந்து வரும் உள்நாட்டு போரில் இதுவரை $1^1/_2$ இலட்சம் பேர் உயிரிழந்திருக்கின்றனர். அதிபர் ஆதரவு படையினர் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த நிலையில், சிரியாவில் நிலவி வரும் கொடிய நிலையை, மனித உரிமை மீறலை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டு செல்ல ஏதுவான தீர்மானம், ஐ.நா. பாதுகாப்பு சபையில் கொண்டு வரப்பட்டது. பிரான்ஸ் கொண்டு வந்த இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்களித்தன.

ஆனால் சிரியாவின் நட்பு நாடான ரஷ்யாவும், சீனாவும் தங்கள் வீட்டோ உரிமையை (மறுப்பு வாக்கு உரிமை) பயன்படுத்தி விட்டன. இதனால் தீர்மானம் நிறைவேறாமல் போய் விட்டது. சிரியாவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது ரஷ்யா தனது மறுப்பு வாக்கு உரிமையை பயன்படுத்தி இருப்பது இது 4ஆவது முறையாகும் வாக்வாளிப்புக்கு பின்னர் ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் சமந்தா பவர் பேசும் போது, "இந்த பூமியில் அமைந்துள்ள நரகத்தில் (சீரியாவில்) வாழுகின்ற மக்களுக்கு நீதி வழங்குவதில் நாம் எப்படி தோற்றுப்போனோம் என்று நமது பேரக்குழந்தைகள், இப்போது முதல் இனி வருங்காலத்திலும் நம்மிடம் கேள்வி கேட்பாரகள்" என வேதனையுடன் குறிப்பிட்டார்.

# மோடியின் பதவியேற்பு விழாவில் பாகிஸ்தான் பிரதமர் பங்கேற்பு



இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் விழாவில், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்துகொள்வார் என பாகிஸ்தான் ஒலிபரப்பு நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் மூலம், மோடி பதவியேற்பு விழாவில் சார்க் கூட்டமைப்பில் உள்ள நாடுகளின் தலைவர்கள் அனைவரும் பங்கேற்பது உறுதியாகியுள்ளது.

ரேடியோ பாகிஸ்தான் ஒலிபரப்பு நிறுவனம், இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் விழாவில், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்துகொள்வார் என செய்தி வெளியிட்டுள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனிப்பெரும்பான்மை பலத்துடன் மத்தியில் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி அமைக்க தயாராகி உள்ளது. டில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நாளை பதவியேற்பு நிகழ்வுகள் நடக்கவுள்ளன.

# ஐரோப்பிய இராணுவ தளங்களை விலக்கிக்கொள்ள அமெரிக்கா முடிவு

நிதிநெருக்கடி காரணமாக ஐரோப்பாவில் உள்ள இராணுவத்தளங்களை விலக்கிக் கொள்ள அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

உலகளாவிய பொருளாதாரப் பற்றாக்குறை வல்லரசு நாடான அமெரிக்காவையும் பாதித்து வருகின்றது. செலவினங்களைக் குறைக்க வேண்டும் என்ற வலியுறுத்தல் நீண்ட காலமாகவே அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இதன் தொடர்சசியாக ஐரோப்பிய நாடுகளில்



செயறபட்டு வரும் தங்கள் இராணுவத்தினரின் பயன்பாட்டுக்கென வைத்திருந்த பல ஆயுத சேமிப்புக் கிடங்குகள் உட்பட கோல்ப் மற்றும் துப்பாக்கி சுடும் பயிற்சி தளங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றை அந்த நாடுகளிடம் திருப்பித்தர அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதுபோன்று மொத்தம் 21 தளங்கள் அந்நாட்டு அரசால் திருப்பித்தரப்பட உள்ளன. ஜேர்மனி, இத்தாலி, டென்மார்க், கிரீஸ், இங்கிலாந்து மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகள் இந்த இடங்களை அமெரிக்க இராணுவத் துருப்புகளின் பயன்பாட்டிற்கு அளித்துள்ளன. இதன் மூலம் அமெரிக்க அரசின் வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டுக்கு 60 மில்லியன் டொலர்கள் மிச்சப் படுத்தப்படும் என்று கூறப்படுகின்றது. கிரைமியா நெருக்கடியினால் ரஷ்யாவிற்கும், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே பிரச்சினைகள் தோன்றியுள்ள இந்த காலகட்டத்தில் அமெரிக்காவின் இந்த முடிவு மேலும் நெருக்கடியைத் தோற்றுவிக்கக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# நாடாளுமன்றத்திற்குள் புகுந்து பாகிஸ்தானில் சீக்கியர்கள் போராட்டம்

மத புனித நூல் அவமதிப்பை தொடர்ந்து பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து சீக்கியர்கள் போராட்டம் நடத்தினர்.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் சீக்கியர்கள் பெருமளவில் வசிக்கின்றனர். அவர்கள் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் உள்ள நாடாளுமன்ற கட்டடத்திறகுள் திடீரென புகுந்தனர்.

கைகளில் பதாகைகளை பிடித்திருந்த அவர்கள் அரசிடம் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தினார்கள். அதைத்தொடர்ந்து போலிசார் விரைந்து வந்து அவர்களை அப்புறப்படுத்தினர்.

பாகிஸ்தானில் சீக்கியர்களின் புனித நூல் அவமதிக்கப்படுவதாகத் தெரிவித்து இந்தப்போராட்டம நடத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் மத அவமதிப்புச் சட்டம் உள்ளது.



இஸ்லாம் மதத்தையும் புனித நூல் திருக்குர்ஆனை அவமதிப்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அது போன்று சீக்கிய மதத்தையும் புனித நூலையும் அவமதிப்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

# நரேந்திரமோடி அழைத்தால் சேர்ந்து வாழத்தயார்



நரேந்திரமோடி அழைத்தால் அவருடன் சேர்ந்து வாழத்தயாராக இருப்பதாக அவரது மனைவி யசோதா பென் தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடிக்கும், யசோதா பென் என்ற பெண்ணுக்கும் இளம் வயதில் திருமணம் நடந்ததாகவும், குறுகிய காலத்திலேயே அவர்கள் பிரிந்து விட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

மோடியும், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது, வேட்பு மனுவுடன் தாக்கல் செய்த பிரமாணப்பத்திரத்தில் முதன் முதலாக தனது மனைவியின் பெயர் யசோதா பென் என்று அதிகாரப்பூர்வமாக தெரிவித்தார்.

இந்த நிலையில் யசோதா பென் அளித்துள்ள ஒரு பேட்டியில்,

அவர் நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஒட்டுமொத்த தேசத்தைவிட அதிகமாக மகிழ்கிறேன். என்னை அழைத்தால் அவரது பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்வேன். அவரது தேர்தல் வெற்றிக்காக விரதம் இருந்தீர்களா என்று கேட்கிறீர்கள். இது எனது அந்தரங்க விடயம். வெளியே சொல்ல மாட்டேன்.

நானும் அவரும் விவாக இரத்துச் செய்து கொள்ளவில்லை. நாங்கள் சேர்ந்து வாழவில்லை அவ்வளவுதான். அவர் எப்போதுமே நாட்டுக்கு சேவை செய்யததான் விரும்பினார். அதனால்தான் தனிப்பட்ட சொந்த வாழ்க்கையை தியாகம் செய்துவிட்டார். அவரைப் பொறுத்தமட்டில், அவரது வாழ்க்கையில் நாடுதான் மிகவும் முக்கியம்.

இத்தனை வருடங்களில் அவர் என்னை ஒரே ஒருமுறை (1987ஆம் வருடம்) சந்தித்திருக்கிறார். நான் என் படிப்பைத் தொடர்வதற்கு அவர் ஊக்கம் தந்தார். அவர் முதன் முதலாக வதோதரா தொகுதியில் வேட்புமனுத் தாக்கல் செய்தபோது, என்னை மனைவி என்று ஒப்புக்கொண்டபோது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

அவர் அழைத்தால் அவருடன் சேர்ந்து வாழத் தயாராக இருக்கிறேன். இவ்வாறு யசோதா பென் கூறியுள்ளார்.

# வேற்றுக்கிரக வாசிகள் விண்வெளியில் நடமாட்டம்



விண்வெளியில் வேற்றுக் கிரகவாசிகளின் நடமாட்டம் உள்ளது என்பதை அமெரிக்க ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

அமெரிக்க விண்வெளி ஆய்வுக்குழுவினர் இது தொடர்பாக அமெரிக்க நர்டாளுமன்ற குழுவுக்கு சமர்ப்பித்துள்ள ஆய்வு அறிக்கையில், கடந்த 50 ஆண்டுகளாக வேற்று கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான சான்றுகள் தொடர்பாக, நடத்திய ஆராய்ச்சியில், அங்கு உயிரினங்கள் வாழ்வதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இந்த விடயம் பற்றி மேலும் ஆய்வு செய்ய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

# இரணைமடு குடிநீர்த் திட்டம் மூலமாக

# 90,000 குடும்பங்கள் நேரடிப்பயனடையும்

## பொறியியலாளர் பாரதிதாசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இரணைமடு குடிநீர்த் திட்டத்தின் மூலம் 90,000 குடும்பங்கள் நேரடியாக நன்மை அடைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதென்றும் யாழ் -கிளிநொச்சி இரணைமடு குடிதண்ணீர் திட்டம் தொடர்பாக 2005 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் பயனுறுதி தன்மைபற்றிய விளக்க கூட்டங்கள் கிளிநொச்சி மாவட்ட காரியாலயம் யாழ். பொது நூலகம் என்பவற்றில் இலங்கை தமிழரசுக்கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் கூறியபோது இத்திட்டம் முழுமையாக அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆதரிக்கப்பட்டன.

இதன் பின்னரே 2011இல் முழு ஒத்துழைப்பின் காரணமாக கடனுக்கான கைச்சாத்தும் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் திட்டமாக்கப்பட்டதை அனைத்துத்தரப்பினரும் அறிவார்.

இவ்வாறு யாழ்.-கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதார மற்றும் சுகாதார திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு தெரிவித்தூர்.

ஒரு தடவை கைச்சாத்து இடபட்டு ஆரம்பிக்கப்பட்ட ஒப்பந்த திட்டத்திற்கு மீள ஏன் கூட்டங்கள் தேவையில்லையே என கேட்ட போது அவர் மேலும் தெரிவிக்கையில்:

இத்திட்டம் 2300 கோடி ரூபாவுடன் பயன்பாடு உடைய பாரிய் நிகழ்ச்சித் திட்டம்.

இத்திட்டம் தொடர்பாக பிரதேச மட்டம் மாவட்ட மட்டம், மாகாணமட்டம், தேசியமட்டம் என 90க்கும் மேற்பட்ட கூட்டங்களின் மூலம் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டமாகும்.

நீர்ப்பங்கீடு தொடர்பான தேசிய கொள்கையின் கீழ் சிறிய மற்றும் பாரிய குளங்களில் இருந்து 65 வீதம் நீர்ப்பாசணத்திற்கும், 35 வீதம் குடிநீர் வழங்கல் போன்ற அத்தியாவசிய தேவைக்கும் பிரதானமாக ஒதுக்கப்பட்ட திட்டமாகும்.

மாகாண ரீதியில் பாதுகாப்பானதும் சுகாதாரமுமான குழாய மூலமான குடிநீர் விநியோகம் என்பது கிழக்குமாகாணம் 40 வீதம் வடமத்திய மாகாணம் 45வீதமும் தென்மாகாணம் 45 வீதமும் ஆக இருக்க வடமாகாணம் மட்டும் 6 வீதம் மட்டுமே உள்ளது.

மேலும் இரணைமடுக் குளத்தின் கட்டு கடந்த 35 வருடங்களாக புனரமைக்கப்படாத ஒன்ற

யாழ்.-கிளிநொச்சி குடிநீர் வழங்கல் மூலம் 90,000 குடும்பங்களை சேர்ந்த 300,000 மக்கள் பெருநன்மை அடையவுள்ளனர்.

எனவே பொதுமக்களான வடமாகாண மக்கள் முழு நன்மை அடையும் திட்டத்திற்கு ஒருங்கிணைந்த அடிப்படையில் அதி உந்துதல் மூலம் திட்டம் முன்னதாக அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார். எந்திரி பாரதிதாசன். (92)

# இன்றையதினம் இந்தியா பயணமாகிறார் ஜனாதிபதி

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி நாளையதினம் பதவியேற்கவுள்ள நிலையில் அதில் பங்கேற்கும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இன்றையதினம் புதுடில்லிக்குச் செல்லவுள்ளார்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி நாளையதினம் மாலை 6 மணியளவிலேயே பதவியேற்கவுள்ளார்.

இன்று புதுடில்லிக்குச் செல்லும் ஜனாதிபதி வரும் செவ்வாய்க்கிழமை வரை தங்கியிருப்பார்.

பதவியேற்பு நிகழ்வை அடுத்து, வெளிநாட்டுத் தலைவர்கள் அனைவருக்கும், நரேந்திர மோடி இராப்போசன விருந்து அளிக்கவுள்ளார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை, எல்லா வெளிநாட்டுத் தலைவர்களையும் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இந்தப் பேச்சுக்கள் 30 நிமிடங்கள் வரை நீடிக்கும் என்றும் தெரியவருகிறது.

புதிய இந்திய அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகிக்கவுள்ள அதிகாரிகள் மற்றும் பா.ஜ.க அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவே, ஜனாதிபதி ஒருநாள் முன்னதாக பதவியேற்பு நிகழ்வுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

# இந்து சமுத்திர "டூனா" மாநாடு கொழும்பில் நடைபெற ஏற்பாடு

iotc ctoi

இந்து சமுத்திர டூனா ஆணையத்தின் 18 வது மாநாடு இம்முறை இலங்கையில் நடைபெறவுள்ளது

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை இந்த மாநாடு இடம்பெறவுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திர டூனா ஆணையத்தின் 31 அங்கத்துவ நாடுகளும், மேலதிகமாக 4 நாடுகளின் பங்கேற்புடன் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

35 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 250 உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் கலந்துக் கொளளவுள்ளனர்.

குறிப்பாக இந்து சமுத்திரத்தில் காணப்படும் சூறை மீன் வளத்தை பாதுகாப்பது தொடர்பிலும், இந்து சமுத்திர கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடுதல், அனுமதிபத்திரமின்றி கடற்றொழிலில் ஈடுபடுகின்றமை போன்ற பல காரணிகள் தொடர்பில் மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது.

இலங்கையை பிரதிநிதித்துவபடுத்தும் வகையில் கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம் மற்றும் நாரா நிறுவன அதிகாரிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

இந்து சமுத்திர டூனா ஆணையகத்தினால் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்து சமுத்திரத்தில் சூறை மீன் பிடிப்பதற்கு இலங்கைக்கு தடை விதிப்பதற்கான நிலைமை காணப்பட்டதாகவும் அதன் பின்னர் கடற்றொழில் அமைச்சின் நடவடிக்கையால், இந்து சமுத்திரத்தில் சூறை மீன் பிடிப்பதற்கான அனுமதி மீள கிடைக்கப்பட்டதாகவும் அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

இந்து சமுத்திர டூனா ஆணையத்தின் 18 ஆவது மாநாட்டிற்கு முரிசி நாட்டின் பிரதிநிதி தலைமை வகிக்கவுள்ளமை குறிபபிடத்தக்கது.

# விமலின் யோசனையை வரவேற்கும் ஹெலஉறுமய

ஜே.என்.பி.யின் யோசனைத் திட்டத்திற்கு ஜாதிக ஹெல உறுமய கட்சி வரவேற்பை வெளியிட்டுள்ளது. விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.என்.பி. கட்சியின் இரண்டாம் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.இந்தக் கூட்டத்தின் போது 12 அம்ச யோசனைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டது.

இந்த யோசனைத் திட்டம் குறித்து ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும், ஜே.என்.பி. கட்சிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளதாக ஜே.என்.பி. கட்சியின் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

# "வேள்ட்விஷன்" நிறுவனத்தின் வாழ்வாதாரப் பயிற்சிகள்

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள வரணி வடக்கு, இடைக்குறிச்சி குடமியன் வரணி இயற்றாளை, மந்துவில் மேற்கு முதலாக கிராம சேவையாளர் பிரிவில் வேல்ட் விசன் நிறுவனத்தினால் சிறுவர்களை முன்னிலைப்படுத்தி வாழ்வாதாரத் திட்ட உதவிகளினை இலக்காகக் கொண்டு பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. மாடு வளர்ப்பு,ஆடு வழர்ப்பு, கோழிவளர்ப்பு, தையல் பயிற்சி, விவசாயம் முதலான தொழில்களை மையப்படுத்தி சிறுவர்களின் பெற்றோர்களை இனம்கண்டு அவர்களிற்கு இரு நாள் பயிற்சி வகுப்புக்களை அந்தந்த பிரிவுகளில் நடாத்தி வருகின்றனர்.

# புகைத்தலை எதிர்த்து தென்மராட்சியில் கருத்தரங்கு

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு தென்மராட்சிப்பிரதேச செயலக மாநாட்டுமண்டபத்தில் நாளை காலை9மணிக்கு பிரதேசசெயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன் தலைமையில் கருத்தமர்வு நடைபெறவுள்ளது.

இதில் சமுர்த்தி வாழ்வெழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினர்ஈ சமுர்த்தி மகாசங்க நிறைவேற்று உறுப்பினர்கள் சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் தென்மராட்சிப் பிரதேச பாடசாலை அதிபர்கள் மதகுருமார்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தென் மராட்சி வாழ்வின் எழுச்சி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் க.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (11)

### செயலாளர்...

அமைச்சுக்கு கூடுதலான நிதி யொதுக்கப்படுவதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே செயலாளர் பதவியில் மாற்றம் ஏற்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிதியமைச்சு,திறைச்சேரி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ.ஜயசுந்தரவிற்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ச பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### இலங்கைத்....

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ,, மோடி அரசு இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் இழைக்கிறது என்று குற்றம் சாட்டியுள்ளார். அது தவறான கருத்து. நாளையதினம் பிரதமர் மோடி பதவியேற்கும் நிகழ்வை தமிழக முதல்வர் புறக்கணிக்கக்கூடாது. - என்றும் அவர் தெரிவித்துள்ளர்.

### பாழடைந்த...

சமூகநோய் பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் பரிசோதனைக் குட்டுத்தப்பட்ட பின்னர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்கள் ஒவ்வொருவரும் தலா 50ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 30ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் ஆகவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (18)

### அரிய வாய்ப்பை...

எமக்கு கிடைக்கப் பெற்ற பொன்னான வாய்ப்பான மாகாண சபை முறைமையை தமது சுயலாபங்களுக்காக இதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைகள் அன்று தவறவிட்டன.

இதனால் பாரிய உயிரிழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் இடப்பெயர்வுகளையும் எமது மக்கள் சந்தித்திருந்தனர். அதேநேரம் எமது நாட்டுக்குள்ளேயே ஏற்பட்ட பல அரிய வாய்ப்புக்களையும் இதே தமிழ்த் தலைமைகள் வேண்டுமென்றே தவறவிட்டு எமது மக்களைப் பற்றி சிறிதளவேனும் அக்கறையின்றி தமது சுகபோக வாழ்க்கையை பற்றி மட்டுமே சிந்தித்து செயற்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைகளில் தாம் கவலை கொண்டுள்ளதாகவும் இம் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை காண விரும்புவதாகவும் மோடி தெளிவாக கூறியிருக்கும் வேளையில் அவரை சந்திக்கும் அரிய வாய்ப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவறவிட்டுள்ளனர்.

எமது மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடக் கூடாது என்றும் அவ்வாறானதொரு நிலையில் அவற்றை தீராப்பிரச்சினைகள் போல் காட்டியே தமது சுயலாப அரசியலை தொடர முடியுமெனும் நிலைப் பாட்டில் தங்கியிருப்பதாலேயே கூட்டமைப்பு இச்சந்தர்ப்பத்தையும் தவறவிட்டுள்ளது.

எமது மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விட்டால் தங்களுக்கு அரசியல் இருப்பிடம் இல்லையென்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அறிந்து கொண்டுள்ளனர்.

எனவேதான், இந்த அரியவாய்ப்பினையும் அவர்கள் தவற விட்டுள்ளனர். எமது மக்கள் மீது உண்மையான அக்கறையும் எமது மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்ற நியாயமான உணர்வுகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இருக்கு மானால் இத் தவறை அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி...

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்தவின் இந்திய வருகை தொடர்பாக எதிர்ப்புத் தெரிவித்து வரும் தமிழக அரசியல் கட்சிகள் மீது நரேந்திர மோடி தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, தனது 'டுவிட்டரில்' கருத்து வெளியிட்டுள்ள மோடி, மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக நிர்வகிப்பது, தாங்கள் அல்ல... மத்திய அரசுதான் என்பது தெரியாமல் இலங்கை அதிபருக்கு விடுக்கப்பட்ட அழைப்பை எதிர்க்கும் தமிழ்நாட்டின் கட்சிகள், உள்ளன (Similarly all TN partz who r opposing srilankan president's invtation dnt knw, itz central govt which manages release of ur fishermen not u.) என்று தெரிவித்துள்ளார்.

### 13ஐ...

13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தாவிட்டால், மோடி அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கத்தைப் போல் வலியுறுத்திக் கொண்டிருக்காது. அவர் இலங்கையின் பிரச்சினை தொடர்பில் சமஷ்டி தீர்வுக்கும் செல்லக் கூடும்.

காரணம் இந்தியாவின் சமஷ்டி முறையில் அதிகமான வெற்றியைப் பெற்றவர் மோடி என்பதை மறந்து விடக் கூடாது எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

# புலம்பெயர் அமைப்புக்கள் இலக்கு; நல்லிணக்கத்திற்கு உகந்ததல்ல

## சுட்டிக்காட்டுகிறது அவுஸ்ரேலியா



(கொழும்பு)

புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் இலக்கு வைக்கப்பட்டதனை நல்லிணக்கத்திற்கான உகந்த செயலாக கருதமுடியாதென அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் நாடாளுமன்ற செயலாளரும் செனட்டருமான பிரட் மேசன், அவுஸ்ரேலிய தமிழ் காங்கிரஸுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இதனைக் கூறியுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுலபடுத்தவும் பயனுள்ளதும் வெளிப்படையானதுமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்குடனான சமாதான திட்டத்தை முன்னெடுக்க அவுஸ்ரேலியா, இலங்கையை ஊக்குவிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மோதல்களின் போது இருத்தப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட கடுமையான குற்றங்கள் தொடர்பில் வெளிப்படையான மற்றும் சுதந்திரமான விசாரணைகளை முன்னெடுக்குமாறு அவுஸ்ரேலியா இலங்கையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலிய தமிழ் காங்கிரஸ், இலங்கையுடனான அவுஸ்ரேலியாவின் கொள்கை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் மேசன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சில வெளிநாட்டு புலம்பெயர் அமைப்புகளை தடை செய்தாலும் அந்த அமைப்புகள் அவுஸ்ரேலியா சட்டத்திற்கு அமைய செயற்படும் சுதந்திரத்தை அவுஸ்திரேலியா கட்டுப்படுத்தாது.

அவுஸ்ரேலிய உரிமைகளுக்கான சுதந்திரத்தை வலுவாக ஆதரித்து வருகிறது.

அத்துடன் புலம்பெயர் அமைபுகள் மற்றும் தனிநபர்கள் இலக்கு வைக்கப்பட்டதை நல்லிணக்கத்திற்கான உகந்த செயலாக அவுஸ்ரேலியா கருதவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி வருகைக்கு எதிர்ப்பு; தீக்குளிக்க முயன்றவர் கைது

(சேலம்)

ராஜபக்ச வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீக்குளிக்க முயன்ற வாலீபரை கைது செய்த போலிஸார் அவர் மீது தற் கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகேயுள்ள வட்டக்காடு, கருப்பூர் பகுதியை சேர்ந்தவர் சின்னு. இவரது மகன் வெற்றி வேல் (31). கட்டிட கொத்தனாராக வேலை பார்த்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் பகல் சேலம் நீதிமன்ற வளாகத்தின் முன் உள்ள நீதி தேவதை சிலை முன்பு நின்று கொண்டு தனது உடல் மீது தேசிய கொடியை போர்த்தியபடி மண்ணெண்ணை ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

இதை பார்த்த அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தண்ணீர் எடுத்து வந்து வெற்றி வேல் மீது ஊற்றி தீ குளிப்பைத் தடுத்தனர். அவரிடம் சென்ற பொதுமக்கள், இப்படி செய்யலாமா என்று கேட்டு வாக்கு வாதம் செய்தனர்.

அப்போது, மோடி பதவியேற்பு விழாவில், இலங்கை ஜனாதிபதி ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள செயலை கடுமையாக எதிர்க்கிறேன். எனது எதிர்ப்பை வெளிக்காட்டும் நோக்கில் தீக்குளிக்கிறேன் என்று வெற்றிவேல் கூறியுள்ளார்.

இதுகுறித்து தகவலறிந்ததும் அஸ்தம்பட்டி பொலிசார் விரைந்து வந்து வெற்றிவேலை கைது செய்து காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில் அவர் மீது தற்கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.


# 7 ஆவது ஐ.பி.எல்

பெங்களூர் 154/6 (20)

ஹோலி-73
யுவராஜ்-25

நெஹரா-3, அஸ்வின், சர்மா, ஜடேஜா தலா ஒரு விக்கெட்

சென்னை 160/2 (17.4)



சிமித்- 34
டுபிளசிஸ்- 54 (ஆ.இ)
டோனி 49 (ஆ.இ)


ராம்போல், யுவராஜ் தலா 1 விக்கெட்

8 விக்கெட்டுக்களால் வென்றது சென்னை

ஆட்டநாயகன்- டோனி

---

ஹைதராபாத்-160/7 (20)



தவான்- 29
ஓஜா- 26
வேணுகோபால் ராவ் 27
சமி -29

மோர்கல், வினய்குமார், டஸ்சட், சகிப்அல் ஹசன் தலா ஒரு விக்கெட்

கொல்கத்தா 161/6 (14.2)

உத்தப்பா -41
கம்பீர் 28
யூசுப்பதான்- 72

கே.வி.சர்மா-4, ஹோல்டர் 1 விக்கெட்

4 விக்கெட்டுக்களால் கொல்கத்தா வெற்றி

ஆட்டநாயகன்-யூசுப்பதான்

# ஜனாதிபதி அழைப்பு: காங்கிரஸ் எதிர்ப்பு

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷவை அழைத்ததன் மூலம், தமிழக மக்களின் உணர்வுகளை தேசிய ஜனநாயக கூட்டணி புண்படுத்திவிட்டதாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், செய்தித் தொடர்பாளருமான ஷகீல் அகமது கூறியுள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

பதவியேற்பு விழாவிற்கு யாரையெல்லாம் அழைப்பது என்பதை நரேந்திர மோடிதான் முடிவு செய்ய வேண்டும் என்றாலும், தமிழர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்பதே தங்களின் எண்ணம் என்று கூறினார்.

மேலும், தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு நரேந்திர மோடி இந்தக் கோரிகையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# நாட்டின் தற்போதைய நிலை ஜனாதிபதி-விமல் விரிவாக பேச்சு

## 12 யோசனைகளும் கையளிப்பு



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்சவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது தேசிய சுதந்திர முன்னணியின் 12 யோசனைகளையும் ஜனாதிபதியிடம் அமைச்சர் விமல் வீரவன்ச கையளித்தார்.

இச்சந்திப்பின்போது அமைச்சர்களான சுசில் பிரேமச்சந்திர மற்றும் டலஸ் அழகபெரும ஆகிய இருவரும், தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர்களான பிரதியமைச்சர் வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜயநாயக்க, எம்.முஸ்ஸமில் ஆகியோரும் உடனிருந்தனர்.

இந்த யோசனைகள் குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் அதுதொடர்பில் கருத்துரைப்பதாகவும் பொருளாதார ரீதியாவும் சரி அரசியல் ரீதியாகவும் சரி தீர்மானங்களை எடுக்கின்ற போது நான் ஒருபோதும் பின் நிற்கமாட்டேன் என்று ஜனாதிபதி தெரிவித்ததர்க அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் காய்ச்சலால் குடும்பப்பெண் உயிரிழப்பு

கடும் காய்ச்சல் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த பேராதரன் கிருஷ்ணகுமாரி (வயது 27) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் கடும் காய்ச்சலால் பீடிக் கப்பட்ட இவர் கிளிநொச்சி வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்ததார் எனத் தெரிவிக்கப் பட்டது. மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் உடற்கூற்றுப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

# அரசியல் குழப்பநிலையை தடுக்க பேஸ்புக் இணையத்தள கண்காணிப்பு

## ஜனாதிபதி தெரிவித்ததாக கூறும் இந்தியன் எக்ஸ்பிரஸ்

நாட்டில் அரசியல் குழப்ப நிலைமைகளை ஏற்படுத்த முயற்சிக்கும் சமூக மற்றும் இணைய ஊடகங்கள் தொடர்பில் கண்காணிக்கப்படும் என் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

அண்மையில் சீனாவிற்கு விஜயம் செய்திருந்த போது சீன ஜனாதிபதி ஜின் பின்கிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சைபர் குற்றச் செயல்களினால் உலகின் பல நாடுகளில் குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகிறது முன்னெச்சரிக்கை ஏற்பாடாக இவ்வாறு குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நாடுகளில் உள்நாட்டு குழப்பங்களை ஏற்படுத்த சில சமூக வலைத்தளங்கள் மற்றும் இணைய ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சில தரப்பினர் இளைஞர் யுவதிகளை பகடைகாய்களாக பயன்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி . சமூக வலையத்தளங்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவதனை தடுக்க சீனாவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட இணைய ஊடகங்கள் சமூக மற்றும் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்துவதை தடுக்கும் முகமாக அவை கண்காணிக்கப்பட உள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என அவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.